27

No. M. 2210.

வருஷ சந்தா ரூ. 1-8-0.

[EDITO]R & PROPRIETOR } வை. மு. கோதைநாயகி அம்மாள்.
(MRS. V. M. PARTHASARATHY IYENGAR.)

JAGANMOHINI

மலர் VI.] [இதழ் 1.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS * MADRAS * 29 NOV 1929

தனிப் பிரதி அணா 3.

3L
M28·6·1
182852

ஜகன்மோகினி ஆபீஸ்.
2, தேரடித் தெரு, :: திருவல்லிக்கேணி, மதராஸ்

குறிப்பு:- ஒவ்வொரு மாசமும் கடைசித் தேதிக்குள் சஞ்சிகை வெளியாகும்.

ஜகன்மோகினி.

இதன் 6-வது ஆண்டு 1928ஹு டிசம்பர்மீ முதல் ஆரம்பம். இதில் ஸ்ரீமதி வை. மு. கோதைநாயகி அம்மாளால் இயற்றப்பட்ட, "நவநீதகிருஷ்ணன்" என்னும் அற்புதமான துப்பறியும் நாவலும் ஹாஸ்ய விநோதங்களும் அனுபவ நீதிகளும். காவியங்களும், இன்னும் மற்ற ருசிகரமான விஷயங்களும் வெளிவருகின்றன. இதன் வருடச் சந்தா உள்நாடு, வெளி நாடு இரண்டிற்கும் தபாற்கூலியுள்பட ரூ. 1—8—0.

சந்தா விவரம்.

(1) சந்தாத் தொகையை நமக்கு நேரில் முன்பணமாக அனுப்பியாவது, வீ. பியில் பணம் கட்டியாவது அல்லது நமது கௌரவப் பிரதிநிதிகளிடத்திலும், ஏஜண்டுகளிடத்திலும் கொடுத்தாவது பத்திரிகையைப் பெற்றுக் கொள்ளலாம். பத்திரிகையை வீ. பியில் அனுப்புவதால் சந்தாநேயர்களுக்கு மூன்றணா அதிக செலவுண்டாகுமாதலால் முன்பண மனுப்புவதே நலம்

(2) இவ்வாண்டில் நாம் எல்லா சந்தா நேயர்களுக்கும் புதிய நம்பரைக் கொடுப்பதால் இனிமேல் அவர்கள் எழுதும் கடிதங்களில் புதிய நம்பரை மறக்காமல் குறிப்பிடவேண்டும்.

(3) பிரதி ஆங்கில மாதமும் கடைசித் தேதியில் நமது பத்திரிகையை நாம் எல்லா சந்தா நேயர்களுக்கும் அனுப்புகிறோம். ஒரு மாதத்து சஞ்சிகை அடுத்த மாதம் 15 தேதிக்குக் கிடைக்காவிட்டால் அது தபாலில் தவறிவிட்டதென்று தெரிந்து உடனே நமக்குத் தெரிவித்தால் வேறு சஞ்சிகையை அனுப்புவோம். அப்படிச் செய்யாதவர்களுக்கு மூன்றணா ஸ்டாம்பு அனுப்பினல்தான் வேறு சஞ்சிகை அனுப்பப்படும்.

(4) இடம் மாறும் சந்தாநேயர்கள் தமது புது விலாசத்தை உடனே நமக்குத் தெரிவிப்பதுடன் தங்களுடைய புது விலாசத்திற்கு சஞ்சிகை சேரும் வண்ணம் தபாலாபீஸோடு ஏற்பாடு செய்துகொள்ளவேண்டும். அப்படிச் செய்யாது சஞ்சிகை தவறிவிடின் அதற்கு நாம் ஜவாப்தாரியல்ல.

(5) நமக்கு ஏஜண்டுகள் இல்லாத இடங்களில் ஐந்து சந்தாதாரர்களைச் சேர்த்துக் கொடுப்பவர்கள் ஒரு வருஷச் சஞ்சிகையை இனாமாகப் பெறுவதுடன் பரிசுப் போட்டியில் சேர்த்துக் கொள்ளப்படுவார்கள்.

பரிசுகளின் விவரம்.

இம்மாதம் 20 தேதிக்குள் பணமனுப்பியவர்களில் கீழ் கண்டவர்களுக்குப் பரிசுகள் விழுந்திருக்கின்றன.

பரிசு	ரூ.	சந்தா நெ.		
1-வது	25	2998	Mr. R. Raghunatha Chettiar	Ramnad
2-வது	15	2995	Mr. C. Venkataraman	Guntakal
3-வது	10	3183	Mr. A. N. Subbaraya Achar	Erode
4-வது	5	3004	Mr. A. B. Mahomed Sharif	Singapore
5-வது	5	3091	Mr. S. Natesa Dikshithar	Bombay
6-வது	5	3134	Mr. M. A. Lattiff	Colombo

உ

ஓம்

ஜகன் மோகினி

"ஐயுணர் வெய்தியக் கண்ணும் பயமின்றே
மெய்யுணர் வில்லா தவர்க்கு"
ஜகன்மோ கினியென்னுஞ் சஞ்சிகையைக் காக்க
ஜகன்மோ கினி! மனத்தைச் சார்ந்து.

REGISTRAR OF ... 28 NOV 1928

மலர் VI	விபவ ௵ மார்கழி௴ December 1928.	இதழ் 1

கடவுள் வணக்கம்

யாவையும் யவரும் தானு யவரவர் சமயந்தோறும்
தோய்விலன் புலனைந்துக்கும் சோலப்படானுணர்வில்மூர்த்தி
ஆவிசேருயிரினுள்ளா லாதுமோர்பற்றிலாத
பாவனையதனைக் கூடி லவனையும் கூடலாமே.

—திருவாய்மொழி

பொருளாகக் கண்டபொரு ளேவைக்குமுதற்பொருளாகிப்
போதமாகித்
தெருளாகிக்கருதுமன்பர் மிடிதீரப்பருகவந்த
செழுந்தேனாகி
யருளானோர்க் ககம்புறமென் றுன்னாத பூரணவா
னந்தமாகி
யிருடீர விளங்குபொரு ளியாதந்தப் பொருளினையா
மிறைஞ்சிநிற்பாம்.

—தாயுமானவர்

அநுபவ நீதிசாரம்.

(1) எந்தக் காரியத்தை நீ செய்த போதிலும் உயர்ந்த நோக்கத்துடனும், கவனத்துடனும், ஒழுங்காகவும் செய்தல் வேண்டும். அவ்விதம் செய்யப்படும் வேலைதான் சிறப்புற்றோங்கும்.

(2) உன் வாழ்நாட்களில் நீ யாரிடமும் பகைமை கொள்ளாதே. உன்னிடம் யாரேனும் பகைமை பாராட்டினாலும் நீ அதைப் பாராட்டாது அவர்களுடன் நேசமாகவே நடந்து கொண்டு உனது பொழுதைப் போக்கு.

(3) உன்னுடைய சிநேகிதர்களைப் பற்றியோ, உன் உறவினரைப் பற்றியோ எவராவது உன்னிடம் தூஷித்தால் அவர்களோடு இணங்கியோ, இணங்காமலோ எதையும் பேசாது மவுனம் சாதி; அதுவே உனக்கு நன்மை பயப்பதாகும். அங்ஙனமின்றி நீ ஏதேனும் பதில் கூறிவிட்டாலோ அதைக் கொண்டு உன்னுடைய தலைக்கே அவர்கள் கல்லைத் தேடுவார்கள். ஆதலின் அப்பேர்ப்பட்டவர்களிடத்தில் ஜாக்கிரதையாய்ப் பேசிப்பிழை.

(4) உன்னுடைய பரிசுத்தமான மனத்தில் எப்போதும் எந்நிலையிலும் கடவுளின் நினைவை ஒரு புறத்தில் பதித்துக் கொள்வதை மறக்காதே.

(5) உனக்கு எத்தகைய ஆபத்தோ, துன்பமோ நேருங் காலத்திலும், கடவுளைத் தோத்திரம் செய்வாயானால் அதன் பலனை இம்மையிலோ மறுமையிலோ அடைவது நிச்சயம். இதை நீ மறவாதே!

(6) சகோதரியே! உன் கணவன், நோயினாலோ, வறுமையினாலோ பீடிக்கப்பட்டிருக்குங் காலத்தில் உன்னுடைய மேலான அன்பைப்பரிபூரணமானமனத்துடன் அவனிடம் நீ காட்டுவாயே யானால், உன்னை மணந்ததின் பயனை அவன் அப்போதே உணர்ந்துகொள்வான்; உனக்கும் பேரின்பம் கிடைக்கும். அதுவே அவனுக்கு அவுடதமும் ஆகும்.

(7) உன்னுடைய ஜீவனோபாயத்திற்காக நீ எந்தத்தொழிலைச் செய்த போதிலும் கடவுளுக்குச் சம்மதியாகவும், நிஷ்களங்கமான மனத்துடனும், சாந்த சொரூபியாயும் செய்யவேண்டும். அவ்விதம் செய்வதே உனது கீர்த்தியைப் பெருகச்செய்யும்.

(8) உன் மனத்தில் இரக்கமென்னும் ஊற்று சுரந்து கொண்டே இருக்கவேண்டும். அவ்வூற்றை நீ உனது சத்துருக்களுக்கும் உபயோகம் செய்யவேண்டும். அப்பொழுதுதான் கடவுளின் இரக்கமாகிய மாரி உன்மீது பொழியும்.

(9) உழைப்புக் குணமும், சகிப்புத்தன்மையும் உடையவனே பெரிய குடும்பத்தைக் காக்கும் சக்தியைப் பெறுவான்.

வை. மு. கோ.

18852

விகடத்துணுக்குகள்.

(வை. மு. கோ.)

1. ஒரு பெரிய சதஸில் ஓர் பாகவதர் ஹரிகதை செய்துகொண்டிருக்கையில் கதையின் மத்திய பாகத்தில், எந்தப் புருடனும் தான் அக்னி சாக்ஷியாக மணந்த மனைவியையின்றி வேறு ஸ்திரீயைக் கண்ணெடுத்தும் பார்க்கலாகாதென்று தீவிரமாக உபன்யாசம் செய்துகொண்டு வந்தார். அப்போது அங்கு பெண்கள் கூட்டத்தில். உட்கார்ந்திருந்த ஓர் மாது எழுந்து பேசத் தொடங்கி, "ஏனையா! பாகவதரே! இத்தனை வயது சென்றும் நீர் ஏன் இங்கு வருகிறீர்?" என்று நான் பல தரம் உம்மைக் கேட்டும் விடமாட்டேனென்று என் வீடே கதியென்றிருக்கின்றீரே; அப்படி யிருக்கும் நீர் இந்த விஷயத்தைப் பற்றி உபன்யாசமும் செய்யவேண்டுமா!" என்றாள். இதைக் கேட்ட பாகவதர் தலை குனிந்தார். சபையில் பலத்த கூச்சலுண்டாய்விட்டது.

2. ஓர் சீமாட்டிக்குத் தேகம் யானைபோலப் பருத்துவிட்டதால் அவள் எழுந்து அசையமாட்டாமல் தவிக்கிறாள். அந்த அம்மாளுக்கென்றுப் பிரத்யேகமாகத் தயார் செய்த மோட்டாரும் அம்மாள் ஏறியதும் அப்பளமாக நொறுங்கிவிட்டதாம். அம்மாள் கடற்கரையைக் காண வெகு ஆவல் கொண்டிருப்பதால் வீட்டிலிருந்தபடியே கடற்கரை வனப்பு முற்றும் பார்ப்பதற்கு அவைகளெல்லாம் வீட்டிற்குத் தெரியும்படியான ஓர் புதுவிதமான கருவி செய்யும்படி ஆகாயதேவனுருக்கு அர்ஜெண்டு தந்தி யடித்திருக்கிறார்களாம்.

3. ஓர் சீமாட்டி, கீழ்மாடியிலிருந்து மேல் மாடிக்கு இறங்கும்போது தலை தடுக்கி மேல் மாடியில் போய் பொத்தென்று பஞ்சு மெத்தையில் விழுந்துவிட்டதனால் படுகாயப் பட்டு வெகு அவஸ்தையுடன் ஆஸ்பத்திரியில் கிடக்கிறாளாம். இச்செய்தியைக் கேட்ட பறவைகளும், ஆகாய விமானங்களும் கீழே இறங்கப் பயப்படுகின்றனவாம். பயம் நீங்குதற்கு விபூதி யளிக்கப் பேயாண்டி தேவருக்குத் தந்தி போயிருக்கிறதாம்.

4. இந்தியாவிலுள்ள கறுப்பு மனிதர் பலர் அக்கரைச் சீர்மைக்குச் சென்று நிறம் மாறிச் சிவப்பாகத் திரும்பி வருவதைக் கண்ட காகங்கள் தாமும் சீமைசென்று சில நாட்கள் தங்கி வந்தால் சிவப்பாய்விடலாம் என்று கூட்டங் கூடித் தீர்மானம் செய்துகொண்டு சீமைக்குப் பிரயாணமாகி விட்டனவாம். அவைகளை ஏற்றிச் செல்வதற்கும், பாதுகாப்பதற்கும் தகுந்த கப்பலும், ஆளும் தேவையாம். விலாஸம்: ஆலமரக் கூண்டு. பறவை போஸ்டு.

5. தற்கால நவீன நாகரிக விநோதமாகவந்திருக்கும் ஆகாய விமானத்தில் ஏறிச் சவாரி செய்ய நான் ஆசிக்கிறேன். ஆனால் சிலர், அதில் ஏறினால் மூளை சிதறிவிடுமென்றும், சிலர் குடல் பிய்ந்துவிடுமென்றும், சிலர் உயிரே நீங்கிவிடுமென்றும் பல விதம் கூறுவதால், ஏதேனும் அப்படி நேர்ந்துவிடக் கூடுமே என்று பயப்படுகிறேன். ஆகையால் மந்திரம் கற்ற ஓர் ஆள் வந்து எனது உடலை என் பெண்டாட்டி யிடத்திலே வைத்துவிட்டு, எனது ஆத்மாவை மந்திர சக்தியால் பிரித்து வேறொரு உடலில் புகுத்தி ஆகாய விமானத்திலேற்றிச் சவாரி செய்வித்துக் கொண்டுவந்து மீண்டும் எனது பழைய உடலில் புகுத்திவிடவேண்டும். அவ்விதம் செய்வோனுக்குத் தகுந்த சன்மானமளிக்கப்படும். உடனே கீழே காணும் விலாசத்திற்கு வந்து சேரவும்.

பீர் பேர்வழி
கள்ளுமொந்தைபுரம்
(வயா) ஒயின்.

Our Honorary Representatives & Principal Agents.

CALCUTTA.
*Mr. R. Vasudevan
c/o, "Capital" Ltd.,
Post Pox No. 14.

CHIDAMBARAM.
Mr. K. S. Narasimha Iyengar,
Kamaleswarer Koil St.
&
Mr. R. S. Maniam,
21, New Street.

CUDDALORE,
Sri Venkata Nilayam,
Chinnappa Mudaly Street.

COLOMBO.
Mr. A. Abdul Gani Sahib,
26. Keyzer Street.

DHARMAPURI,
Mr. K. V. Ramaswamy Iyer,
Bazaar Street.

ERODE
Mr. A. N. Subbarayachar,
20, New Street.

GOLMURI.
Mr. M. R. Krishnamurthy,
No. 1, Wardha Road.

KUMBAKONAM.
*Mr. T.B. Seetharama Chettiar,
Special Magistrate,
West Iyen Street.

KUALALUMPUR.
M. Mohamed Dulfakir & Co.,
G. P. O. Box No. 268.

MANANTODDY.
Mr. P. A. Parameswara Iyer,
Reading Room,
Payingatri Village.

MATUNGA, (G. I. P. Ry.)
Mr. V. Krishnaswamy,
22, Visrani Bhavan.

NEGAPATAM.
*Mr. T. V. Balarama Chettiar,
17, Veerabadraswami
Koil Street.
&
Mr. S. Rangaswamy
c/o, S. Srinivasa Iyengar Esq.
Vakil, Velippalayam.

PONDICHERRY.
*Mr. Swaminatha Padmanaba
Pillai,
112, Madras St.
&
Messrs. Lakshmanprasad & Co.

NATAL.
*Mr. V. Murugan
c/o, Tongaat Sugar Co.,
Tongaat.

RANGOON,
Naveenakatha Book Depot,
121, Montgomery Street.

SINGAPORE.
Mr. M. Oli Mohamed,
3, High Street.
&
M. Mohamed Dulfakir & Co.,
Corner of High Street &
34, North Bridge Road.

SALEM.
Mr. T. S. V. Krishnamurthy
Chettiar,
Shevapet.

TIRUPPAPULIYUR.
Mr. P. Ramalinga Chettiar,
Vani Vilas Book Depot.

TIRUTTANGAL.
Kamma Balan Book Depot.

UDUMALPET.
Mr. T. V. Radhakrishna Chetti,
No. 54. Dhali Road.

நவநீத கிருஷ்ணன்

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
2 8 NOV 1929
MADRAS

வை. மு. கோதைநாயகி அம்மாள்
எழுதியது.

பிரசுராலயம்:
"ஜகன்மோகினி" ஆபீஸ்,
26, தேரடித்தெரு,
திருவல்லிக்கேணி, சென்னை.

காபிரைட்]

முகவுரை

அன்பார்ந்த சகோதர சகோதரிகாள்!

தாயற்றச் சேயாகிய இவ்வடியாளைப் போாதரவுடனும், அபாரமான ப்ரீதியுடனும் பாலூட்டித் தாலாட்டிச் சீராட்டிப் புத்தி புகட்டி வளர்த்த எனதரிய சிறிய தாயாரின் அன்பான ஆசீர்வாதத்தினாலும், எம்பெருமானின்க்ருபாகடாக்ஷத்தினாலும் நம் போஷியரின் அபிமானத்தினாலும் முன்னர் நான் ஏதோ என்சிற்றறிவுக்கு எட்டிய வரையில் வரைந்து விடுத்த புத்தகங்களாகிய வைதேகி, பத்மசுந்தரம், சண்பக விஜயம், ராதாமணி'' கௌரீ முகுந்தன்'' முதலியவற்றை தாங்கள் அன்புடன் ஆதரித்ததே போல இந் நவநீத கிருஷ்ணனை'' யும் தங்களுடைய பூர்ண உதவியால் ஆதரிக்கவேண்டுமாய்க் கேட்டுக் கொள்கிறேன்.

எனது சிறிய தாயாராகிய ஸ்ரீமதி. நீ. ல. கனகவல்லியம்மங்கார் அவர்கள் தெய்வ பக்தியும், ஹாஸ்ய விநோதமும் சதா குடிகொண்ட மனத்தினராதலால் அன்னவரின் பிரியப்படியே பக்தி ரஸத்தையும் ஹாஸ்யரஸத்தையும் பிரதானமாக உடைய இந் நவநீதகிருஷ்ணன் என்னும் நூலை இயற்றத் துணிந்தேன்.

பெற்ற தாயினும் பெரிதொரு தாய் போன்ற பாசத்துடன் என்னை நேசமாய் எனது ஓராண்டு முதல் சீராய் வளர்த்த எனதாருயிர்ச் சிற்றன்னையாரின் அன்பின் பொருட்டும், என்னருமைத் தந்தையினும் அன்பு மிக்க சிறிய தந்தையாகிய ஸ்ரீ. உ. வே. நீ.ல ஸ்ரீநிவாஸாசாரியரின் ஆசீர்வாதத்தின் பொருட்டும் இந் நூலை அவர்களது பாதகமலங்களுக்கு எனது முழு மனத்துடன் அர்ப்பணம் செய்து தண்டன் சமர்ப்பிக்கின்றேன்.

சிறியாள் வரைந்த இந்நூலில் அறியாது கிடக்கும் குற்றங் குறைகளைப் பொறுத்தருளுமாறு வேண்டுகிறேன்.

தங்கள் சகோதரி

வை. மு. கோதைநாயகி.

MORE OPINIONS ABOUT

GOWRI MUKUNDAN

THE "HINDU"

(28—11—1928)

We have received a copy of *Gowri-Mukundhan* an interesting Tamil novel, by SRIMATHI V. M. KOTHAINAYAKI AMMAL, who has already won a reputation as a novelist as evidenced by the public appreciation of her previous works, *Jambaka Vijiam*, *Vaidehi* and *Padmasundaran*.

The book under review contains the pathetic and yet elevating story of two orphans, a prince and a princess who, under stress of circumstances, are denied even the ordinary comforts of life. Under assumed names, they spend their youth under the patronage of generous people. A sealed cover was left behind by their mother Sundaravalli, who committed suicide unable to bear the hardship and insult caused by the usurper of her husband's kingdom, after he murdered the legitimate monarch. Only very late in the story, their real identity is revealed, as their mother had specially desired that the sealed cover should be opened by a ruling monarch after a certain period. The spirit of public service and sacrifice, displayed by the prince, Mukundan, the admirable modesty, chastity, refinement and beauty of his younger sister, Gowri, are vividly brought out. The princess is eventually married to a prince of the neighbouring country and the hero, Mukundhan, marries a girl of his own choice, who is eventually recognised as a relation of his own mother.

There are several stirring events in the novel both inspiring and educative. Virtue triumphs over vice and the novel concludes with rewards to the virtuous and punishment to the wicked. *The moving incidents in the book are described in an eloquent and telling style.*

"DAILY EXPRESS"

(12—12—1928)

Srimathi Kothainayaki Ammal is not a raw hand in the field of novel-writing. She is already the authoress of a few Tamil novels, and has made *a name for her clear thoughts, fine diction and sustaining the interest of the reader from the beginning to the end.* All her novels appear in instalments in "Jaganmohini," a monthly journal edited by her, and on the completion of the instalments, the stories appear in book form. In these days of voluminous novel-writing, it is difficult to separate the chaff from the gold, but it is not difficult for a shrewd reader, to find out, after turning over a few pages of a book whether the book will survive the onslaught of time and the fierce gaze of public criticism. Only a few books of the annual output generally withstand the test, and we hope that Gowri-Mukundhan will be one of them. The book under review is a bulky one, and is the story of two orphans brother and sister who, though born of a royal family, are ignorant of their real birth and undergo various difficulties aud hardships, till at last love enters into their lives and the story ends happily. Though the narration is in the usual orthodox style, yet the reader's interest is well kept up. The authoress, in the course of her story, inculcates a lot of useful moral principles, useful for all and especially for women, backed up by apt quotations from well known Tamil classics. *We have no doubt that much of worldly wisdom will be gained by reading this novel.* The book is neatly printed and got up and a few illustrations add to its attractiveness.

இந்து நேசன்

(10—11—1928)

கௌரீமுகுந்தன்

இப்பெயர் கொண்ட கற்பனைக் கதையொன்று சமீபத்தில் நாம் வரப்பெற்றோம். ஸ்ரீமதி வை. மு. கோதைநாயகியம்மாளுக்கு

நாவல் எனும் கற்பனைக் கதைகள் எழுதுவதில் மிக்க பரிச்சய முண்டென்பதற்கும், அங்ஙனம் எழுதும் நாவல்கள் படிப்போர்க்கு வீர, சூர, பராக்கிரம, சோக, சிருங்கார ரஸங்கள் அனைத்தையும் ஊட்டுதற்குரிய சாதனங்கள் என்பதற்கும் இக்கதைகளே சான்றுகின்றன. கதை யெழுதுவதென்பது சாமான்யமான காரியமல்ல; மனோவேகத்தினால் கற்பனைகளை உள்ளத்தே ஆவாஹனம் செய்து கொண்ட பின்னர், அவைகளைத் தெள்ளிய நடையிற் கோர்வையாகப் புனைந்து எழுதியாகவேண்டும். அவ்விதம் எழுதுவதிலும் சொற்பிழை, எழுத்துப் பிழை, பிரயோகப்பிழை முதலான அம்சங்களுக்கு இடமுண்டாகாதபடி கவனிக்கவேண்டும். இவை யனைத்தையும் ஸ்ரீமதி கோதைநாயகியம்மாள் ஊன்றிக் கவனித்து வரும் பத்ததியை அனுஸரித்து வருவதனாலேயே மிக்க சுலபமாகவும் தீவிரமாகவும் கதைகளெழுத அவ்வம்மையாருக்கு அனுகூலங்கள் ஏற்பட்டிருக்கின்றன. மேலும் கதையிடையிலே ஆங்காங்கு சமயோசிதமான பழமொழிகளும் மேற்கோள்களும் காட்டப்பட்டிருப்பது அவ்வம்மையின் கல்வித்திறத்திற்கு அறிகுறியென்றுங் கூறுவோம். நம்முன் வந்திருக்கும் இக்கதையைத் தொடங்கிவிட்டால் முடிவு வரையில் வாசியாமல் எவரும் கீழ்வைக்கமாட்டார்கள். எனவே அவ்வளவு தூரம் ஊக்கத்தையும் லக்ஷியத்தையும் இது கொடுப்பதாகின்றது. ஏறக்குறைய 270-பக்கங்கள் கொண்ட இந்த நாவலானது பெரிய எழுத்துக்களில் அச்சிடப் பட்டிருப்பதால் யாவரும் தெளிவாக இதைப் படிப்பதற்காகும்; சிரமமில்லாமல் படித்து முடிப்பதற்காகும். நமது நண்பர்கள் இதை வாங்கி ஆதரிக்குமாறு மனமுவந்து சிபார்சு செய்கின்றோம்.

கௌரீ முகுந்தன்

பஞ்சரத்னம்

அறுசீர்க்கழி நெடிலடியாசிரிய விருத்தம்.

1. இசையாரும் பலவளனும் பழுநியநாவலந்தீவென்
றியம்பியேயேத்
திசையாரும்பரவுமுயர்பாரதமாதாதனக்கோர்
திலகமான

நசையாருஞ் சென்னைபுரி வளர்திருவல் லிக்கேணி
நல்லூர் மேவிப்
பசையாருங் கண்ணனிரு பதக்கமலமனவரதம்
பரவி வாழும்

2. ஓதையணி யந்தணர்கள் குலவிளக்காய்ப்
பெண்மணியா யோதுகு நற்றேன்
கோதையணியுங்கோதை நாயகியாஞ்
சோதரியிக் குவலயத்தே
போதையணியாசனமாக் கொண்டகலை
வாணிமகிழ் பூப்பத்தந்த
காதையணியாங்கௌரீ முகுந்தற்சிங்
கிணையொருநூல் கண்டிலேமால்

3. நடைவளனை வியந்திடுகோ! நற்றேனுந்
தீம்பாகு நவையே யாக்குந்
தொடைவளனைவியந்திடுகோ! சோதரர்கண்
மாட்டடேன்றுஞ் சோர்வி லாவன்
புடைவளனை வியந்திடுகோ! உண்மை நெறிச் செங்கோலை
யோச்சு மன்னர்
கொடைவளனைவியந்திடுகோ! எனயாருங் கூறவருங்
கோள்கைத்தம்மா!

4. இத்தகைய நாவல்தனை யாடவரு மாதர்களு
மினிய பூவே
யொத்தகையா லேயெடுத்து நோக்கிடிலெத் துயர்களையு
மொருவி யேமெத்
தத்தகையா ரின்புசேறி சாகரத்து
ளாழ்த்தி நலதக்கோர் கள்கே
சித்தகையா நெறிசெலுத்தி சீர்மதியைத்
தினமகத்தே தீட்டு மாலோ

5. திண்ணியகற் பறிவொழுக்க மன்பீகை பொறைநிறையுந்
தீதிலாத
புண்ணியநல் லுபகாரம் நன்றிமறவாமையுநற்
புந்திக் குள்ளே
யெண்ணியவெக்காரியமு மினிதளித்துப்பண்டைநெறி
யின்னே காட்டுந்
தண்ணிய நற் கடலுலகி லிதன்பயன்கட் களவின்று
சாற்றுங் காலே.

கணியூர்
14—12—28 } P. S. M. E. முஹம்மது யாக்கூபு சாஹிப்

S. S. சங்கம்



"என் பிராண நாதா! நமக்கு லக்ஷம் பவுன் வருவதாயிருப்பினும் தற்போதுள்ள இவ்வானந்தம் அவைகளால் உண்டாக மாட்டாதென்றே என்னுள்ளம் நினைக்கின்றது."

[பக்கம் 17.

உ

ஸ்ரீ

நவநீத கிருஷ்ணன்

வாணி துதி

அலகிலாக் கலைகளின் ஆதார மாகி
மாநிலத் துள்ள மக்கள் மனத்தின்
இருள்பிரிந் தேகத் திருவருள் புரியும்
மங்கள வல்லிநின் மலரடி பணிந்தேன்
நவநீத கிருஷ்ணன் நானிலத் தோங்க
நாடிநின் கருணை நல்குவாய் தாயே!

கணபதி துணை

நவநீத கிருஷ்ணன் நலமெலா மெய்தக்
கணபதி யேநீ கருணைசெய் வாயே

1—வது அதிகாரம்

அன்பிற் சிறந்த அங்கனமணி

"அகில புவன ரக்ஷகி! ஆதி பராசக்தி! அம்பிகே! பக்தியின் பரமார்த்தத்தை யறிந்தோ அறியாமலோ அடியாள் செய்திடும் இப் பூஜையை நினது முழு மனத்துடன் ஏற்றருள வேண்டும். என் தாயே! ஜகன்மாதா!

பூரணிபுராதனி சுமங்கலை சுதந்தரி
புராந்தகித்ரியம்பகியெழிற்
புங்கவிவிளங்குசிவசங்கரிசகஸ்ரதள
புட்பமிசைவீற்றிருக்கு
நாரணிமனாதீதநாயகிகுணாதீத
நாதாந்தசத்தியென்றுன்

ளுமமேயுச்சரித்திமேடியர்நாமமே
நானுச்சரிக்கவசமோ
வாரணிசடைக்கடவுளாரணியெனப்புகழ
வகிலாண்டகோடியீன்ற
வன்னையேபின்னையுங்கன்னியெனமறைபேசு
மானந்தருபமயிலே
வாரணியுமிருகோங்கைமாதர்மகிழ்கங்கைபுகழ்
வளமருவுதேவையரசே
வரைராஜனுக்கிருகண்மணியாயுதித்தமலை
வளர்காதலிப்பெணுமையே!

—தாயுமானவர்

என் தாயே! இவ்வுலகில் மானிடராகப் பிறந்துள்ள அனை வருடைய மனத்திலும் பக்தியைப் பிரகாசிக்கும்படி செய்து அவரவர் வினையின் பயனால் நேரும் பாபத்தைப் போக்கும் மார்க்கத்தைச் செய்தருள்வாய் என்னம்மணீ! என் வரையில் யான் வேண்டுவது ஒரு பெருமையாக மாட்டாது. உலகிலுள்ள சகல ருக்கும் பொதுவாக நீ அருள்மாரி பெய்து உய்விக்க வேண்டும் என்று வேண்டுவதே நீதி நிலையாகும். அகில லோகத்திலுள்ள மக்களை யெல்லாம் ஈன்ற அன்னையாகிய உன்னை யன்றி மக்களிடத் தில் அன்புகொண்டு ஆதரித்து ஜன்மம் ஸபல மடையச் செய்வ தற்கு வேறு ஓர் மாதா உண்டோ! என் தாயே! உனது குழவி யாகிய எனது ப்ராணபதியின் மீது நினது பரிபூரணமான கருணை யைச் செலுத்தி அன்னவருக்கு யாதொரு தீங்கும், தேக அசுகமும் நேராவண்ணம் காத்தருளவேண்டும். என்னுருயிர்த் தாயே! இப் புவியில் அடியாள் வேண்டுவது என் காதலரின் தீர்க்காயுளேயாம். என்னுயுள் பரியந்தம் அவர் திட சரீரத்துடன் இருக்க வேண்டும். எனக்கு அவ்வாறு வரனை அன்புட னளித்து ஆதரித்தால் போதும் என் தாயே!'' என்று வெகுவாய் மனங் குவிந்து தோத் திரித்து வேண்டிக்கொண்டு, அங்கு எழுந்தருளப் பண்ணி யிருக்கும் ஜகத்ரக்ஷகனாகிய பிதாவையும், ஜகன் மாதாவாகிய அன்னையையும் பலவிதமாகப் பாடியும், மந்திரத்தின் மூலம் அர்ச்சனை செய்தும்,

நிரம்பவும் கனிவான பக்தியுடன் தூப தீப நைவேதனங்கள் முதலி யன செய்தும் பூஜை செய்துகொண்டிருந்த ஓர் அழகிய மாது சிரோரத்தினம், தனது பூஜை முடிவடைந்ததும் ப்ரதக்ஷிண நமஸ் காரங்கள் செய்து, அஞ்சலிபந்தத்துடன் அகமகிழ்ந்து, பக்தியின் பெருக்கால் மெய்மறந்து, தன் மனத்திற்குள்ளாகவே ஏதோ தன் மன விருப்பத்தை இஷ்ட பூர்த்தி செய்து வைக்கவேண்டு மென ப்பிரார்த்தித்தபடியே, தந்தப் பதுமையோ அல்லது கருணையங் கடவுளின் மாயா விலாசத்தினுலுண்டான மங்கையோ என்று கண்டோர் ஐயுறும்படியான நிலையில் நின்றுகொண்டிருந்தாள்.

அத்தருணம் அந்தப் பொற்கொடியின் உயிர்க் காதலனுகிய கட்டழகன் அவ்விடம் வந்தான். தனது ப்ராண நாயகி அபாரமான பக்தியினுல் பூஜை செய்வதையும் தன் பால் மிகுந்த ச்ரத்தையுடன் வேண்டிக்கொண்டு இனிமையான சாரீரத்தினுல் பாடித் துதிப் பதையுங்கண்டு அவன் உள்ளம் பூரித்தான். அவனது சிரம் ஆநந்த பரவசத்தினுல் ஆடுகின்றது. தன் ஆருயிர்க்காதலி அந்த அதியத்புத மானதும் மகான்கள் செய்வதுபோலானதுமான பூஜையைப் பக்தி யோடு செய்யும் விநோதத்தைக்கண்கொள்ளாக் காட்சியாகப் பார்த்த படியே சிறிது தூரத்தில்-அவள் தன்னைப் பார்க்காதவிடத்தில்-அப் பூஜையை முற்றிலும் பார்ப்பதற்காக ஆசித்து நின்றுவிட்டான்.

ஆகா! அங்குச் சிலா ரூபமென்றும் சித்திரப் பாவை என்றும் பிரமிக்கத் தக்க விதமான பக்திப் பெருக்கினுல் மெய் மறந்து நின்றுகொண்டிருக்கும் தன் காதலியைக் கண்ட அந்த மனித னுடைய உள்ள மகிழ்ச்சிக் கோரெல்லையே இல்லை. அவளைப்பார்க்கப் பார்க்க அவன் மனது தடாகத்திலுள்ள தாமரை இரவியைக் கண்டு பூரித்து மலர்வதே போல மலர்ந்துவிட்டது. அத்தருணத் தில் அவன் "நாம் இப்போது எதிரில் சென்று இவளைக் கட்டி யணைத்துக்கொள்ளலாகுமா?" என்று எண்ணுகிறுன். "அவ்வாறு செய்வதால் இவளுடைய பூஜா நிஷ்டைக்குப் பங்கம் நேரும்; ஆதலால் நாம் தூர விருந்தவாறு இவளுடைய எழிலின் அமுதைப் பருகுவோம்,' என்ற நோக்கத்துடன் நின்றுவிட்டான். அவ்வன்னப்

பேட்டின் கண் கொள்ளாவனப்பைக் கண்டு அத்தகைய அபாரமான பாக்யத்தைத் தனக் களித்த கடவுளை எண்ணி மனமாரத் துதித் தான். "ஆகா! நான் முற்பவத்தில் செய்த நற்பயனுக இம்மின்னிடை மாதரசி நமக்கு வாய்த்தாள் போலும்; அல்லையேல் பெரியோர் செய்த பூஜாபலத்தினுல் திருமகள் போன்ற உருவைப் படைத்த இத்தருணீமணியை அக்கருணையங் கடல் எனக்கருளினரோ! அடாடா! நவநீதம் என்கிற பெயர் இம்மாதரசிக்கே மெத்தவும் பொருந்தும். நவநீதத்தினிடத்தில் எத்தகைய இனிப்பும் குணங் களும் உள்ளனவோ அதே போல இம்மங்கை நல்லாளிடத்தில் அருமையான மேம்பட்ட அரிய குணங்களும் இன்சுவையின் இனிப்பும் நிறைந்து கிடக்கின்றனவே! பொற்பு நிறைந்த இப்புகழ்க் கொடி நல்லாளின் எழிலாரமுதத்தை எனக்குப் படைத்த அவ் வீசனின் சரணாரவிந்தங்களில் யான் எத்தனை தரம் பணிந்தாலும் மனம் திருப்தி யடையாது. மந்தகாசமான நகை முகத்தை நோக்கினுல், மதியைக் கண்டவுடனே இருளாகிய கள்வன் விலகி போடுவதே போலக் காண்போரின் மனத்தில் எத்தகைய வேதனையோ, சங்கடமோ இருப்பினும் உத்தரக்ஷணமே அகன்று விடும். கருவிழியை நோக்கினுலோ வெகு நேரமாகத் தாகத்தினுல் தவிக்கும் உயிருக்கு இவ்விழியானது தன்னகத்தே கருணை, கற்பு, அன்பு, பக்தி முதலிய வற்ருத நீரூற்றுகளையுடைய நீண்ட ஓர் ஏரியைப் போலத் தோன்றும். அதைக் கண்டே தாக சாந்தி செய்துகொண்டதுபோலான ஆநந்த மேற்படும். அவ்வேரி கரையின் மீது தோப்புகள் அடர்ந்திருப்பது போலான புருவங்களைக் கண் டாலோ நிழலிலே சிரமப் பரிகாரம் செய்து கொண்டு ஆநந்த மயமாகச் செல்வது போலவும் தோன்றும். அதோடு மற்றும் அவ்விழியின் தோற்றமாவது.—நீல நிறத்தை யுடைய மணிபோன்ற நடுவிழியானது, சாக்ஷாத் நீலமேக ச்யாமள ரூபனுகிய ஸ்ரீ கிருஷ்ண பரமாத்மாவைப் போலவும், அந்த விழியின் மத்தியில் தெரிகின்ற பாப்பாவானது அந்தப் பரமாத்மாவின் திருமார்பிலே கோயில் கொண்டிருக்கும் திருமகள் போலவும் தோன்றும். மற்றும் நீலகண்ட னுகிய சிவபிரானுடைய கண்டத்தைப் போலவும், அச் சிவ பிரான் உமையாளைத் தனது ;சமபாகமாகக் கொண்டிருப்பதால்,

அப்பாப்பாவானதுபார்வதியே போலவும் காணப்படும். அடாடாடா! இவ்விழியின் அழகொன்றை மட்டும் நோக்கியவாறிருப்பின் பசியேது தாகமேது கவலையேது கஷ்டமேது. எல்லாம் பறந்து விடுகின்றன. ஆ! அதோ அவள் பூஜை முடிந்துவிட்டது; அவள் இவ்விடமே வருகிறாள்'' என்று கூறியபடியே அவ்விடத்திலிருந்த ஓர் சாய்மான நாற்காலியில் அமர்ந்தான்.

அத்தருணம் நவநீத மென்கிற அம்மாதரசி தான் பூஜை செய்த புஷ்பங்களையும் நிவேதனம் செய்த ப்ரசாதத்தையும் தன தழகியகரத்தில் ஏந்தியவாறு, பூர்ணமதியைப் போன்ற முகத்தில் புன்னகை தவழ பெண்யானையைப் போல் நடந்து தனது நாயக னிருப்பிடம் வந்து அவன் பாதங்களில் அம்மலர் கொண்டு பூஜித்து, நிவேதனம் செய்த பொருளை தனது நாயகனின் வாயில் தானே ஊட்டிப் பின் அவனை வணங்கி எழுந்து அவனது புஜத்தை தனது கையால் தடவியபடியே அவனை நோக்கி "என்னுருயிர்த் தலைவா! என்னவோ பெரிய ஆலோசனையில் ஆழ்ந்திருப்பதாகத் தெரிகிறதே! ஏன்? கடினமான வழக்கு ஏதாவது வந்துவிட்டதோ?'' என்று கேட்டாள்.

இதைக் கேட்ட அந்த மனிதன் நகைத்துக்கொண்டே பேசத் தொடங்கி, "கண்மணி! நவநீதம்! கேஸ் விஷயமாக ஓர்வித யோசனை யுமில்லை. நான் இவ்விடம் வந்து சுமார் 15 நிமிடங்களாகின்றன. உன்னுடைய பக்தியின் ப்ரபாவத்தையும், நீ செய்த பூஜையின் மகிமையையும், தோத்திரம் செய்து பாடிய இனிமையையும் கண்டு என் தேகம் பரவசமாகிவிட்டது. உனக்கிருக்கும் பக்தியில் சதாம் சத்தில் ஒரு பாகம் என்னுள்ளத்தில் நிலைக்கவும், அந்தக் கருணா காரனை நினைத்துத் தொழவும் எனக்கு எப்பொழுது அருள் பிறக்கும் என்றுதான் யோசிக்கின்றேன். உனது பூஜையை யான் இது பரியந்தம் நேரில் கண்டது கிடையாது; அவகாசமும் இருந்த தில்லை. இன்று நேரில் கண்டவுடன் எனதுள்ளமே மாறுபாட டைந்து கலங்குகின்றது. என் காதலி! உனக்குமட்டும் ஈசன் இத்தகைய உன்னத புத்தியைப் பிறவியிலேயே அளித்ததையும்,

அத்தகைய உன்னையே எனக் களித்ததையும் எண்ணி யான் மகிழ்ந்து பூரிக்கின்றேன். எல்லாம் அவன் கருணைதான்'' என்று கூறி முடிக்குமுன் அம்மாதரசி பேசத் தொடங்கி, ''நாதா! அவனன்றி ஓரணுவும் அசையாது என்கிறபடி உலகத்தில் அவனது செயலாலன்றி ஓர் அணுவாவது அசையுமா! அவனுடைய தோற்றமே உலகம்; அவனுடைய விளையாட்டுச் சாமான்களே உலகத்திலுள்ள சராசரங்களுமாம். எப்பிறவியிலும் உயர்தரமான பிறவி மானிடப்பிறவி என்றும் இப்பிறவி தப்பினால் எப்பிறவி வாய்க்குமோ என்றும் ஆன்றோர்கள் கூறியுள்ளார்கள். அத்தகைய அரிய பிறவியை எடுத்துள்ள இம்மானிடர்களின் மனத்தில் அறிவுக்கும், அன்பிற்கும், பக்திக்கும் ஈசன் நம்மைப் படைக்கும்போதே தக்க இடமும் அளித்திருக்கிறார். அந்தப் பரம்பொருளளித்தவற்றை நாம் கைப்பற்றாமல் அன்புவைக்குமிடத்தில் துன்பத்தையும், பக்திவைக்குமிடத்தில் துர்புத்தியையும், அறிவு வைக்குமிடத்தில் அறியாமையையும் வைக்கிறோம். இப்படியே கடவுள் கொடுத்த யாவற்றையும் நேர்விரோதமாக முதலிலிருந்தே பழக்கிவருகிறோம். இவ்வாறிருந்தால், பிறவிப்பிணியை நீத்தல் என்பதே அற்று, மாறி மாறிப் பலபிறப்பும் பிறந்து, பல துர்கிருத்யங்களிலே உழன்று, அவைகளின் பயனாக இம்மையிலும் மறுமையிலும் நன்மை என்பதையே அறியமாட்டாது, தீமைக்கடலிலேயே விழுந்து துளைந்துகொண்டிருக்கிறோம். இப்படியிருந்தால் கடவுளைக் கண்டறிவதெவ்விதம்? மனித ஜன்மமெடுத்தவருக்கு அன்பு, பக்தி என்பன இல்லையேல் அந்த ஜென்மம் வ்யர்த்தமேயாம்; பயன் தருவதாகாது. அதனாலேயே ''பக்திலேனி நர ஜன்ம மேன்துகு?'' என்று பெரியார் கூறியுள்ளார்.

சுவற்றிற்கு மேற்பூச்சுப் பூசுவதேபோலத் தோலைத் தேய்த்துப்பளபளப்பாக வைத்துக்கொண்டு ஆடையாபரணதிகளால் அலங்கரித்துக்கொண்டு காண்போருக்கு வெகு அழகாக விளங்குவது மனிதஜன்மமெடுத்ததற்குப் பயனாகாது. அதனால் கடவுளின் முக உல்லாசத்திற்குப் பாத்திரமாக விளங்குவதற்குமாகாது! நாதா! இதற்கோர் நிதர்சனம் பாருங்கள். ஓர் அழகிய சிறு குளம் இருக்

கின்றது. அக்குளத்தில் தாமரை, செங்கழுநீர், நீலோத்பலம் முதலியன உத்பவிக்கின்றன. அக்குளத்திற்குப் படித்துறைகள் வெகு அழகாகக்கட்டிப் படித்துறைக்குமேலே மண்டபம், மரங்கள் முதலியன அமைத்து அக்குளத்துத் தண்ணீரையும் இலை புஷ்பங்கள் முதலியனவற்றையும் எவ்விதம் சீராக வைக்கவேண்டுமோ அவ்விதம் வைத்துக்கொண்டால் மட்டும் அக்குளம் எழிலுள்ளதாக விளங்குமேயன்றிக் குளத்துத்தண்ணீரில் துர்நாற்றமும் பாசியும் படர்ந்து, குளத்தில் சேறும் அதிகரித்து, அதிலுள்ள புஷ்பங்கள் செழிக்காது அவையும் அழுகி நாற்றமெடுத்துப் பாழாகிக் குளம் கண்ணாலே காண்பதற்கும் அருவருப்புண்டாகத்தக்க ஆபாசமுடையதாமானல் அவ்வழகிய படித்துறையாலும் மண்டபாதி மரங்களினாலும் யாதேனும் பயனுண்டோ? உண்டாகாது. 'ஆகா! இத்தகைய படித்துறையுள்ள குளம் பாழாகிவிட்டதே!'' என்று காண்போர் கூறுவர். அதுபோல மனிதர்களையும் 'அடடா! எத்தனை அழகு, எத்தனை ஐச்வரியமிருந்தும் இம்மனிதன் நற்குணமின்றிப் பாழாய்விட்டானே'' என்று கூறிவிடுகின்றார். இதனால் ஏதேனும் நன்மையுண்டா?

மனிதரின் மனத்தில் எத்தகைய துக்கமோ, சுகமோ, நன்மையோ, தீமையோ எவைகளிருப்பினும் அத்துடன்கூடக் கடவுளிடத்து பக்திக்கும் ஓர் கடுகு ப்ரமாணம் இடம் வைத்துக்கொண்டால் அந்தக் கடுகைக்கொண்டே கடலையும் கடக்கலாம். என் கண்ணா! பக்தி என்னும் விஷயத்தை ஆராய்ச்சி செய்தால் அது ஒரு பெரிய மலையன்று; மடுவன்று; அடவியன்று; அக்கினியுமன்று; சாமான்யமானதாகவே தோற்றுகின்றது. அதாவது, தனது ஜீவியத்தில் தான் எந்தத் தொழிலைச் செய்தபோதினும், எந்த மதஸ்தனாகவிருந்தபோதினும், அவரவர் தொழிலையும் மதத்தையும் பேதித்துக்கொள்ளாது அந்தத் தொழிலிலும் மதத்திலும் மறைந்து கிடக்கும் கடவுளின் பிரபாவத்தையறிந்து அவருடைய நாமத்தை இடைவிடாது பஜிப்பதொன்றே சிறந்த பக்தியாகின்றது. முற்காலத்தில் யாகமென்றும், யக்ஞமென்றும், ஜபமென்றும், தபமென்றும் பலவிதமாகக் கருமங்களைச் செய்து கடவுளின் அருளுக்குப்

பாத்திரமானுர்களென்று கேள்விப்படுகிறேம். இக்கலிகாலத்திலோ, அக்ரமமும் அநீதியும் அதிகரித்து அவனியில் எங்கும் வ்யாபித்துக் கொண்டதற்கு அனுகூலமாக பக்தி செய்து கடவுளின் கழலேயடையும்படியான மார்க்கத்தை வெகு சுலபமாகச் செய்திருக்கிறுர் அக் கடவுளே. அதாவது,

கலிலோ ஹரி ஸ்மரணமு ஒகடேகாக இதர
மார்க்கம் மறி லேதய்யா! என்றபடி

கலிகாலத்தில் கடவுளேப் பஜிப்பதற்கு மேலே குறித்த சிரமமின்றி நாமரூபமாகப் பஜிப்பதொன்றே போதும் என்று பெரியார் கூறியுள்ளார்.

மனிதப்பிறவிகொண்டவர்கள் எக்காரியத்தைச் செய்தபோதிலும் தனக்கு அக்காரியத்திஞல் சிரமம் ஏற்படும் நேரங்களில் மட்டுமேனும் "என்னப்பனே! நாராயணு! கோபாலா! சங்கரா! மகாதேவா! ஏசுநாதா! அல்லாஹு! என்று தன்தன் மதாசாரப்படி கடவுளின் நாமத்தையே கூறித் தனது அலுப்பைத் தீர்த்துக்கொள்ளுவானேயானுல் அவர்களிடத்தில் கடவுளின் கருணே சுரந்து கொண்டே இருக்கும். அதைவிடுத்து "ஐயோ! "ஐயோ! என்று அரற்றுவதால் யாதுபயன்? ஐயோ என்ற பதம் எத்தகையதோ அதேபோல இவனது பிறவியும் ஐயோ என்கிற விதமாகவே முடிந்துவிடுகிறது. கடவுளேப் பஜிக்க வேளேயோ, சமயமோ, காலமோ வேண்டுமா? ஒன்றுமில்லே. உறக்கத்திலும், உண்பதிலும், தொழிலிலும், நடமாடும்போதும் கடவுளின் நாம பஜனேயைச் செய்துகொண்டிருந்தால் அவன் எத்தகைய துர்க்ருத்யங்களேச் செய்தாலும் நற்பயனேயே அடைவான். மகா பாவி அஜாமேளன் என்பவன் இறக்குந்தறுவாயில் தனது செல்வனே "நாராயணு!" என்று அழைக்க, அந்த நாமஉச்சாரணமே பஞ்சுப்பொதியில் நெருப்பு வைத்தது போல அவனுடைய பாபமாகிய மூட்டையைத் தகித்து அவனேப் பரமபதத்திற்கனுப்பியது. இதை நாம் படித்தும் கேட்டுமிருக்கிறேம்: அந்த நாமத்தின் சுகத்தைப்பற்றி ஸ்ரீ தியாகராஜ ஸ்வாமிகள் "நருடை புட்டினந்துகு ஸ்ரீ ராம நாமஸ்மரணே ஸுகம்"

என்று அருமையாய் அருளியிருக்கிறார். அதே போல பகவந்நாம ஸ்மரணம் ஒருவன் தெரிந்து செய்தாலும், தெரியாமல் விளையாட்டாகச் செய்தாலும் அதனுடைய மகிமையை அது காட்டிவிடும். நம்முன்னோர்கள் தமது மக்களுக்கு பகவந்நாமாவையே பெயர் வைக்கவேண்டும் என்ற விதியை எதற்காக ஏற்படுத்தியுள்ளார்களென்பதைக் கூர்ந்து கவனித்தால்; அதன் கருத்து எளிதில் விளங்கவில்லையா! தமது குழந்தைகளை அன்போடு அழைக்கும் மூலமாகவேனும் கடவுளின் நாமத்தை உச்சரித்துக்ருதார்த்தமடையட்டும் என்கிற நோக்கங்கொண்டேயாம். அத்தகைய அருமையான நோக்கத்துடன் கையாண்டுவந்த பழக்கத்தைத் தற்போது கைவிட்டதுபோல் சிலர் நவநாகரிகமாக புதிய புதிய பெயர்களை அர்த்தமில்லாது இட்டு அழைக்க முற்பட்டுவிட்டார்கள். இது எவ்விதமிருக்கிறதெனில், நம்முடைய வீட்டு ஜலதாரையை நாமே அடைத்துவிட்டால் அந்த ஜலதாரையிலுள்ள துர் நீரும், அசுத்தமும் வெளிச்செல்ல இடமின்றி நாற்றமெடுத்துப் புழுப்புழுத்து அதனால் பல வியாதிகள் வருவதேபோல நம்முடைய பிறவியில் செய்துள்ள பாபங்களை ஒரு சிறிதும் போகவிடாது வைத்துக்கொண்டு தவிப்பதற்குச் சமமாகிறது. கடவுளின் நாமாவைத் தெரிந்து பஜித்தாலும் தெரியாது பஜித்தாலும் அதன் பலனை யடையாது போகமாட்டோம். ஆகையால் நாம் எந்தவிதமாகக் கடவுளைப் பஜித்தாலும் நாம் நமது பிறவிப் பிணி நீங்கி உய்யலாம்."

நாதா! ஒரு மனிதன் சதா சிற்றின்பப் பித்துக்கொண்டு தாசி வீட்டுடன் கிடந்தானும். தாசியே வெறுத்து விலக்கியும் அவன் அவளைவிடாது சரணம் புகுவதாயும், தன்னைக் கைவிடாது பாது காக்க வேண்டுமென்றும் சிற்றின்ப வெறியால் உளறினனும். மகா புத்திசாலியாகிய அந்தத் தாசி படித்த அறிவாட்டியாகையால். அவனைக்கைவிடுவதில்லை என்று கூறியதுடன் "இனிமேல் என்னை நீ முன் போலமதனசுந்தரி என்றழைக்காது என் இஷ்டம் போலக் கிருஷ்ணம்மாள் என்று அழைக்கவேண்டும்" என்றுளாம். அதன் கருத்தாவது, தான் சமுசாரிகளைப் போல அந்த மனிதனைத் தவிர வேறு ஒருவரையும் முகமெடுத்தும் பார்ப்பதில்லை என்று கடவுள் மீது ஆணை செய்

திருந்ததாலும் தன்னையே நம்பிய அந்த மனிதனும் இனியேனும் சிறிது புண்ணியம் செய்யும் வழியைத் தேடிக்கொள்ளச் செய்ய வேண்டுமென்றும் கருதிக் கடவுளின் நாமமாகிய கிருஷ்ணம்மாள் என்று தன் பெயரை மாற்றிக்கொண்டாளாம். அன்றியும் ராமம்மாள் என்று வேலைக்காரியின் பெயரையும் மாற்றினளாம். அந்த மனிதன் அவ்விருவரையும், 'கிருஷ்ணம்மா! ராமம்மா!' என்றே அழைத்து வந்ததன் பயனாக முக்தியையுமடைந்தானும். அதுபோல எந்த விதமாகவேனும் சரி த்யான ரூபமாகவோ கான ரூபமாகவோ, மோன ரூபமாகவோ, அபிமான ரூபமாகவோ அக்கடவுளை பூஜை செய்தால் மட்டும் நாம் எடுத்த ஜன்மத்திற்கு ஓர் நற்கதியுண்டாகுமே யன்றி வேறு விதத்தில் நாம் நித்ய பதவியை அடைய முடியவே முடியாது. பகவந்நாமத்தைத் தியானித்தால் அது நமக்கு முக்தி யளிப்பதை மட்டுமல்லாமல்,

''குலந்தருஞ் செல்வந் தந்திடு மடியார் படுதுய ராயின வெல்லாம்
நிலந்தாஞ் செய்யும் நீள் விசும் பருளு மருளொடு பெருநில மளிக்கும்
வலந்தரும் மற்றுந் தந்திடும் பெற்ற தாயினு மாயின செய்யும்
நலந்தருஞ் சொல்லை நான் கண்டு கொண்டேன் நாராய ணாவென்னும் நாமம்''

என்று திருமங்கை மன்னன் அருளிச் செய்தபடி மேற் கூறிய யாவற்றையும் அளிக்கு மென்பது திண்ணம்.

என் இன்ப வடிவே! இதைக்குறித்துத் தாங்கள் கவலை ஏன் கொள்ளவேண்டும்? தங்களுடைய உயிரும் அடியாளின் உயி ரும் ஒன்றல்லவா! நம்மிருவருக்குள்ளாக நாம் செய்யும் நன்மை தீமை இரண்டும் நமக்குள் சமபாகமாகுமல்லவா! அடியாள் செய் யும் பூஜையும் பஜனையும் தமக்காகவே செய்வனவன்றோ! தங்களுக் குச் சுகமான நோயற்ற வாழ்க்கையையும், குறைவற்ற செல்வத்தை யும், தீர்க்காயுளையும் கோரியே யான் பஜனை செய்கின்றேன், அது தங்களுக்கும் பலனளிக்கும். ஓர் மரத்திற்கு அடிவேரில் விடும் ஜலம் இலை, கிளை, புஷ்பம், கனி முதலிய எல்லாவற்றிற்கும் செல்வது போல அடிவேராகிய கடவுளுக்குப் பக்தியாகிய பாத்தியைக் கட்டி, அன்பாகிய எருவையிட்டு நாமமாகிய நீரைப் பாய்ச்சினல் அக்கட வுளின் கிளைகளாகிய நம்மெல்லோனரயும் அந்தத் தனிப்பரம்பொ

ருள் காத்தருள்புரிவார். தங்களுடைய உத்தமமான இருதயத்தில் கடவுளுடைய நினைவு சதா குடிகொண்டிருப்பதை யானறிவேன். அஃதொன்றே போதும்; அதைக்குறித்துத் தாங்கள் கவலையே கொள்ள வேண்டாம். ஒருசிசுவின் போஷணையைத் தாயானவள் கவனிப்பதுஎவ்விதம் கடமையோ அதேபோலத் தனது காதலனின் நன்மைகளைக் குறித்து இல்லக்கிழத்தி கவனிப்பது கடமையாகும்; அதனையேயான் செய்துவருகிறேன். ஆதலால் தாங்கள் கவலையே கொள்ள வேண்டாம்.'' என்று வெகு உருக்கமாயும் அழுத்தமாயும் கூறினுள்.

இதைக் கேட்ட அவள் கணவன், பெரியதோர் பிரஸங்கம் போன்ற வார்த்தைகளாகிய மதுவை யுண்டு மயங்கியவன் போலானுன். தான் எதிர்த்துப் பேசவும் இடமில்லாமல் சாமர்த்தியமாயும், சாதுர்யமாயும் அவள் பேசியதானது அவனுடைய மனத்தை விகாஸமடையச் செய்தபடியால் அவன் ஆநந்த பரிதனுனன். அவள் பேச்சு முடிந்ததும் அவன் நிமிடநேரம் ஏதும் பதிலே பேசாது மவுனமாக விருந்தான். பின்னர் நவநீதத்தை வாரியணைத்துத் தன் பக்கலில் உட்காரவைத்துக்கொண்டு "என் கண்ணின் கருமணி போல்வாளே! மாமணியே! இத்தகைய பிரஸங்கம் செய்வதற்கு நீ எப்போது பழகினை என்பதே எனக்குத் தெரியவில்லை. உனது புத்தியின் விசாலமான மொழிகளைக் கேட்கக் கேட்க எனது உள்ளம் பூரித்துவிட்டது. என் இன்ப நிலையமே! பக்தி செய்வதன் சுருக்கமான, வழியை அறிந்தாலும் கூட ஒய்வின்மையே இல்லாத உபத்திரவத்தில் சிக்கிச்சதா கவலையே கொண்டுழலும் என்போன்ற மனிதன் தனது கவனத்தில் கடவுளை வைத்துத் த்யானிப்பதென்பது தான் சாத்யமாகுமா என்று தோன்றுகின்றது.

நவநீதம்:—நாதா! நான்தான் முன்பே தெரிவித்தேனே! யார் யார் என்னென்ன தொழில் செய்தாலும் அதனுல் கஷ்டமோ, நஷ்டமோ, இன்பமோ, துன்பமோ நேரிடினும் அந்தக் காலங்களில் வாய் தானுகவே 'ஐயோ!' என்றும் 'அநியாயமே!' என்றும் பிதற்றுவது சகஜமானது. அத்தருணங்களில் மேல் குறித்த பதங்களை நீக்கி 'என்னப்பனே! நாராயணு! ராமா! க்ருஷ்ணு!' என்று

தம்தம் மதப்படி கடவுளின் நாமத்தை உச்சரித்தால் சாலவும்போது மன்றோ? அதைச் செய்வதற்கும் மனிதருக்கு அவகாச மில்லை என்று கூறுவது பொருத்தமாகாது. தாங்கள் புகுந்துள்ள வேலையோ சொல்ல வியலாத பரம ஆபத்தான வேலையாகும். நாதா! இத்துறையில் தாங்கள் சென்றிருப்பதே எனக்கு மெத்த வேதனையாயும் சங்கடமாயும் சதா கவலையாயு மிருக்கின்றது. இந்த வேலையில் இருக்கும் தமக்குக் கவலையும் கஷ்டமும் நீங்கி யிருக்கும் நேரம் சொற்ப மென்றே கூறலாம். அத்தகைய தாங்கள் கவலை கொள்ளும் நேரத்திலும் கஷ்டப்படும் நேரத்திலும் சதா பகவானைத் துதியுங்கள்; அதுவே சிறந்த பக்தியாகும். நாதா! என் மனத்திற்கு நான் எத்தகைய விதத்தில் போக்குக் கொடுப்பினும் என் னுள்ளத்தில் தங்களுடைய வேலையைப் பற்றிய கவலையே அதிகமாகப் பாதிக்கின்றது. நான் எத்தனை முறை சொல்லியும் இப் போலீஸ் இன்ஸ்பெக்டர் வேலைக்கே பிரியப்பட்டுத் தாங்கள் சென்றுவிட்டீர்கள். தாங்கள் வீடு விட்டு வெளியில் சென்று விட்டால் திரும்பிவரும் வரையில் கவலைதான் என்னை வதைக்கின்றது. தாங்கள் நிம்மதியாக வீட்டில் சிறிது நேரம் கவலை யற்றிருக்கும் நாள் உண்டோ? எந்த வேளையோ, இரவோ, பகலோ, எப்போதும் திடும் திடும் என்று பயங்கரமான கொலை வழக்கிலும், கொள்ளை வழக்கிலும், கள்ளர் மத்தியிலும் சென்று ஈடுபடும் படியாகவே நேரிடுகின்றது. தாங்களாகப் பிடிக்கும் துஷ்டர்கள் தங்கள்மீது கடும் பகைமை கொண்டு எந்த நிமிடம் என்ன செய்து விடுவார்களோ, எத்தகைய ஆபத்து நேர்ந்து விடுமோ, எவ்வித மான செய்தி காதில் விழுமோ என்கிற கவலையே என்னை வதைப்பதால் யான் அந்தக் கவலையை மாற்றி மனத்திற்கு ஓர் ஆறுதலளிக்கும் பொருட்டாகப் பகவந்நாமத்தையே உச்சரித்துக் கொண்டிருக்கிறேன். என் காதலா! தங்களுக்கு ஒருவராலும் ஒருவித மான தீங்கும் நேராத வண்ணமாகக் காக்கவேண்டியே அந்தக் கருணை மூர்த்தியையும், கருணைகரியையும் வணங்கித் ;தொழுகின்றேன். இப்போது தாங்கள் அந்த வேலையை விட்டு வேறு வேலைக்குச் செல்லலாகாதா! நமக்குப் பணமும், புகழும், கீர்த்தியும் இதனால் குறைவுபடினும் நம் மனது மட்டும் நிம்மதியாகிக்

கவலையின்றி இருக்குமல்லவா! கவலையுடன் கூடி எத்துணை சுக போகங்கள் இருப்பினும் அவை சூரியன் முன் வைத்த விளக்கொளி போலவே இருக்கின்றன. ஏன் செய்வேன்?'' என்று கூறியவாறு வருந்தினாள்.

இதைக் கேட்ட அவளது காதலன் நிரம்பவும் கனிந்த அன்புடன் பேசத் தொடங்கி "என்னுருயிர் நாயகி! உனக்குத் தெரியாதது ஒன்று மில்லை. அங்ஙன மிருக்க நீ ஏன் கவலைப்பட வேண்டும்? அந்தத் தனிப் பரம்பொருளாகிய கடவுளின் கட்டளை எங்ஙெங்ஙந்த விதம் இருக்கின்றதோ அதே போல எல்லாம் நிகழும். இதற்கு வருத்தமும் கவலையும் ஏன் கொள்ளவேண்டும்? அவனுடைய அபயதான மிருக்கும் வரையில் நமக்குப் பயமென்பதே இல்லை. இதை உறுதியாக நம்பு. நான் எல்லாப் பாரத்தையும் அவன் தலையில் போட்டுவிட்டு அவன் எவ்வழி விடுகிறானோ அவ்வழியே செல்வதென்ற தீரமே கொண்டுளேன். ஆதலால் நீ கவலைப்பட வேண்டாம். இதுகாறும் நீ சொல்லிவந்த யாவற்றையும் மறந்தனையா! பக்திசெய்து முக்தி பெறுவது திண்ணமல்லவா! அதே போல அவனுக்கினை இது என்று எண்ணி வேலை செய்வதில் ஒருவிதமான குறைவும் நேராது; வருந்தாதே!'' என்றான்.

இது கேட்ட நவநீதம் "நாதா! எல்லாம் உண்மைதான். எத்தகைய வேதாந்த வழியில் மனத்தைத் திருப்பிக்கொண்டு உறுதியாக விருப்பினும் அந்த மனமான இளந் தளிரானது அசைந்தும், கவலையாகிய காற்றினால் அலைந்து கிழிந்தும் போய்க் கொண்டே இருக்கிறது. இதற்கென்ன செய்யலாம்?'' என்றாள்.

இது கேட்ட கிருஷ்ணன் நவநீதத்தைக் கட்டி முத்த மிட்டு "என் கண்மணியே! உனது அன்பின் முதிர்ச்சியினால் இக் கவலையிருப்பது உத்தமப் பெண்களின் இயற்கையேயாகும். உனது பக்திக்குக் கடவுள் கருணை செய்வார். பயமில்லை; கவலையை யொழித்துக் கண்ணீரை நிறுத்து'' என்று கூறித் தேற்றினான்.

அத்தருணம் நவநீதத்தின் தகப்பனுரால் அனுப்பப்பட்ட ஓர் வேலையாள் அவ்விடம் வந்தான். அவனைக் கண்டதும் நவநீதம் எழுந்து விலகி நின்று "என்ன செய்தி?" என்று விசாரித்தாள். அந்த வேலையாள் கள்ளம் கவடு தெரியாதவன். அத்தோடு சுத்த மூடன். அவன் நவநீதத்தையும் அவள் புருஷனுகிய முத்து கிருஷ்ணனையும் வணங்கி நின்றுன். அவனைக் கண்ட முத்து கிருஷ்ணன் நகைத்த வண்ணமாகவே பேசத்தொடங்கி "என்னப்பா! என்ன விசேஷம்! உனக்குக் கலியாணமென்று யாரோ கூறினுர்களே உண்மைதானு?" என்றுன்.

இது கேட்ட அவ் வேலையாள் திடுக்கிட்டுப் புலம்பியபடியே, "ஐயோ! வேண்டாம், சொல்லாதீர்கள்; சொல்லாதீர்கள். கலியாணமென்கிற பேச்சே வேண்டாம். அதைக் கேட்டாலே எனக்கு பயமாயிருக்கிறது.

முத்து கிருஷ்ணன்:—ஏனடா! பயமென்ன! கலியாணம் செய்துகொண்டால் பக்ஷணம் சாப்பிடலாம்; பெண்டாட்டி வருவாள். தினம் விருந்து சாப்பாடு போடுவார்கள். குழந்தைகள் பிறக்கும். இத்தனை சுக மிருக்கையில் ஏன் வேண்டா மென்கிறுய்?

வேலைக்காரன்:—ஐயோ! கலியாண மென்றுல் எவ்வளவோ கஷ்டங்களிருக்கின்றனவென்று என் குரு சொல்லக் கேட்டிருக்கிறேன். அதனுல்தான் பயம்.

நவனீதம்:-இல்லாவிட்டால் செய்துகொள்ளச் சம்மதந்தானே?

வேலைக்காரன்:—அந்தக் கலியாண எழவிலே இருக்கப்பட்ட கஷ்டம் இன்னதென்று தெரிஞ்சால் அது ரொம்ப கஷ்டமில்லாதே பூட்டா கொஞ்சம் இஷ்டந்தான்.

முத்துகிருஷ்ணன்:—அடே அப்படி வாடா வழிக்கு. கஷ்டமென்றுல் கலியாணத்திலே முதலில் சிறிது கஷ்டம் பின்னர்ச் சுகந்தானே?

வேலைக்காரன்:—அது எப்படி! அந்தக் கஷ்டத்தைச் சொல்லுங்கள். அதற்குமேல் நான் சொல்கிறேன்.

முத்துகிருஷ்ணன்:—ஏனடா கேட்கிறுய்? அந்தக் கஷ்டத்தைக் கேட்டால் பயந்து விடுவாய். பின் செய்துகொள்ளமாட்டாய். திடீரென்று கஷ்டப்பட்டுவிட்டால் அதனுல் அதிகத் துன்பமில்லை.

வேலைக்காரன்:—ஐயா! எனக்குக் கலியாணம் செய்து கொள்ள ஆசைதான். நான் ரெண்டொருத்தரைக் கேட்டதில் அவங்க கூறியதைக் கேட்டு நான் நடுங்கியே சும்மா விருந்து விட்டேன். தாங்கள் போலீஸ் ஐயா ஆனதால் புளுகமாட்டீர்கள்: உண்மையைக் கூறுங்கள். நான் செய்து கொள்கிறேன்.

முத்துகிருஷ்ணன்:—நான் முதலிலேயே தெரிவித்தும் நீ கட்டாயப்படுத்துவதால் கூறுகிறேன் கேள். கலியாணம் என்னும் பதத்தில் க என்று வருவதே அந்தக்கலியாணத்தில் பெரிய கஷ்டமிருப்பதாகத் தெரியவில்லையா! முதலில் கலியாணத்திற்குப் பெண் நிச்சயித்துவிட்டால் அன்றுமுதல் தினம் ஒருவேளைசோறுதான் தின்னவேண்டும். அதோடு ஒருவர் எதிரிலும் வராது நான்கு நாளைக்கு இருட்டாயுள்ள இடத்திலேயே இருக்கவேண்டும். ஐந்தாவது நாள்முதல் காலையும் கையையும் சேர்த்துக்கட்டிவிட்டு ஓர் பெரிய பீபாயில் தள்ளிவிட்டுப் பின்னர் ஐந்து நாட்கள் கழித்து வெளியில் எடுத்து முகத்தில் செம்புள்ளி கரும்புள்ளியெல்லாம் குத்தி, மாலை புஷ்பம் எல்லாம் அலங்கரித்து தலைமீது ஓர் குடத்தை ஏத்தி உன்னையோர் பன்றியின்மேல் உட்காரவைத்து மேளதாளத்துடன் ஊர்வலம் வருவார்கள். அதன் பின்னர் வீதியில் பெரிய பள்ளத்தைத் தோண்டி அதில் உன்னைப் புதைத்து உன் தலைமீது பெரிய கொம்பை பந்தற்காலாக நட்டுவிடுவார்கள். அதன்மேல் ஐந்து நாட்கள் கழித்து உன்னை வெளியிலெடுப்பார்கள். அன்றுமுதல் தாலிகட்டும்வரையில் சரியாக நடுநிசி 12 மணிக்கு எழுந்து உங்கள் பந்துக்கள் வீடுதோறும் சென்று உதயமாவதற்குள் சமையல் செய்துவைத்துவிட்டு வரவேண்டும். பகல் வேளையில் மாமியாரை ஒரு தோள்மீதும், மாமனுரையோர் தோள்மீதும், பெண்

டாட்டியைத் தலைமீதும் தூக்கிக்கொண்டு, உன் தாய்தந்தையர்களை முதுகில் கட்டிக்கொண்டு பெரிய எருமைக்கிடாவைக் கயிற்றிற்கோத்து இடுப்பில் கட்டிக்கொண்டு ஊர் எல்லையைச் சுற்றிவரவேண்டும். அதோடுநின்றதா? தினம் நான்கு எருமைக்கிடாவையும் எருதுகளையும் கட்டி அவைகளினிடத்திலிருந்து சுமார் 10 படி பால் கறந்து அந்தப்பாலை திரட்டுப்பால் காய்ச்சி அதை நீயே தின்றுவிடாமல் எல்லோருக்குமளிக்கவேண்டும். அதன்மேல் கலியாணத்தன்று முதல் நாள் இரவு உன்னையோர் தூணில் கட்டிவிட்டு வருபவர் போகிறவர் எல்லோரும் தமது கை சலிக்கும்வரையில் அடித்துவிட்டுப்போவார்கள். அதன்மேல் உதயத்திற் கட்டையவிழ்த்து உனக்கு நலங்கு வைத்து தலையை மொட்டையடித்து ஒருபக்கத்து மீசையை எடுத்துவிட்டு வாயிலுள்ள நான்கு பற்களை மெல்ல வைத்தியனைக் கொண்டு வாங்கிவிட்டு அதன்மேல் மணவறையில் உட்காரவைத்து மேளம் வாசித்துக் கலியாணத்தை நடத்துவார்கள். பெண்கழுத்தில் தாலிகட்டியாய்விட்ட பின்னர், உன் பாடு குசால்தான். அன்றிரவே சோபனம் செய்துவிடுவார்கள். சோபன அறைக்குள் நீ சென்றதும் அங்கு அலங்காரம் செய்திருக்கும் கட்டிலை மெல்லத் தூக்கி உன் தலைமீதுவைத்துக்கொண்டு அன்றிரவு முழுவதும் அவ்வறையில் சுற்றிச்சுற்றிவந்து மறுநாள் விடியுமுன் அதைக்கீழே வைத்துவிட்டால் அதோடு உன் கஷ்டம் நிவர்த்தியாகிவிட்டதென்று தீர்மானம்தான். அதன்மேல் உனக்கு ஒரு கஷ்டமும் இல்லை; நித்யசுகந்தான். குழந்தைகுட்டிதான்; எல்லாம் வைபவம்தான். இதென்ன ஒரு பெரிய கஷ்டமா என்ன?" என்று சிறிதும் நகைக்காது கூறினன். இதைக்கேட்ட நவனீதம் குலுங்கக்குலுங்க நகைத்தாள்.

அந்த வேலைக்காரனே தனது தலைமீதே இடிவிழுந்துவிட்டது போலான பீதியையும் முகக்கோணலையும் அடைந்தவனாய் நடுங்கியவாறு கிருஷ்ணன் காலில் பலதரம் விழுந்து எழுந்து "ஐயோ! ஐயோ!வேண்டாம்! வேண்டாம்! அந்தக் கலியாண கல்லெடுப்பே வேண்டாம்.அவர்கள் சொல்லியதற்கும் நீங்கள் சொல்லியதற்கும் எத்தனையோ பேதமிருக்கிறது; அவர்கள்தான் இவைகளைவிட்டுவிட்

டார்களோ! அல்லது நீங்கள் தான் விட்டுவிட்டீர்களோ! ஐயையோ! அந்தச்சனியனே வேண்டாம். ஐயா! கொழுந்தையெ நாளைக்கி வரச்சொன்னுங்க; இதைச்சொல்லவே நான்வந்தேன். நான் போகிறேன். குரு வார்த்தையின் படியே நான் கல்யாணமே செய்து கொள்ளவில்லை!' என்று கூறியவாறு அங்கு நிற்காமல் ஓடிவிட்டான்.

நவனீதம் தன் பர்த்தாவை நோக்கி, "பிராண நாதா! இத்துணை பாடு பட்டுத் தான் என்னைத் தாங்கள் மணந்தீர்களோ! அடாடா! அசடு ஒன்று அகப்பட்டால் அதை இவ்விதமாகவா பயமுறுத்துவது? ஐயோ! இப்படி பயமுண்டாக்காதிருந்தால் அவன் கலியாணம் செய்துகொள்வானே என்னவோ! ஐயோ! பாவம்! ஏன் அவன் மனதைக் கலைத்துவிட்டீர்கள்?" என்றாள்.

இது கேட்ட முத்துக்கிருஷ்ணன் நகைத்தபடியே பேசத்தொடங்கி "என் கண்மணி! நான் உன்னுடைய கவலையைப் போக்குவதற்கே இவ்விதம் தமாஷ் செய்து உன்னை நகைக்கச்செய்தேனேயன்றி வேறல்ல. அவனுக்கு இத்தனை வயது கழிந்தது; இனி கலியாணமாம்; கருமாதியாம். வேடிக்கைக்காக தமாஷ் செய்தேன். உன்னை உன் பிதா எதற்காக அழைத்தாரோ தெரியவில்லையே!" என்றான்.

இதைக்கேட்ட நவநீதம் பேசத்தொடங்கி "நாதா! ஏதோ முக்கியகாரியமிருப்பதனாலேதான் என் பிதா அழைத்திருக்கிறார்; வீணே அழைக்கமாட்டார். ஆதலால் நாளையே நாம் சென்று விசாரித்து வருவோம். மணி 8 அடிக்கப்போகின்றது. தாங்கள் போஜனத்திற்கு வாருங்கள்" என்று கூறி வெகு கனிவுடன் அழைத்துச்சென்று அன்புடன் போஜனமிட்டு உண்ணச்செய்து, பின் தானும் உண்டெழுந்து தாம்பூலசகிதம் கணவன் அறையை அடைந்து அவனுக்குத் தாம்பூலமளித்துப் பாதங்களை வருடிக்கொண்டே பேசத்தொடங்கி "என் பிராண நாதா! நமக்கு லக்ஷம் பவுன்வருவதாயிருப்பினும் தற்போதுள்ள இவ்வானந்தம் அவைகளால் உண்டாகமாட்டாதென்றே என்னுள்ளம் நினைக்கின்றது. தாங்கள் சதா இவ்வடியாளுக்குத் தரிசனம்ருதம் ஊட்டிக்கொண்டே

பிருந்தால் தங்களுடைய சகலவேலைகளையும் தமதடியாளாகிய யான் செய்துவிடச் சித்தமாகக் காத்துக்கொண்டிருக்கிறேன். தங்களுடையவெகு பயங்கரமான வேலையோ தம்மையன்றிப் பிறர் செய்வதற்கில்லாத கொடியதாகவிருக்கின்றது. இலையில் வைத்த உணவை முற்றும் புசித்துப் பசிதீர எழுந்துவந்தோம் என்கிறபாடு மல்லவா இல்லை. சாப்பிட உட்காருவதற்குள் தங்களை எழுப்பிவிடக் கூடிய வழக்கு வந்து 'கைக் கேட்டியது வாய்க் கேட்ட வில்லை'' என்கிறபடி செய்துவிடுகிறது. சரியானபடி நித்திரை செய்வதற்கும் அவகாசமில்லாத இவ்வுத்தியோகத்தைக் கடவுள் தமக்களித்து, சதா கவலையே அடைந்து வருந்தும்படியாகச் செய்துவிட்டாரே! இந்தக் கவலை நீங்கும்படி செய்துவிட்டால்மட்டும் எனது உள்ளம் சாந்தமடைந்து நிம்மதியான உண்மையானந்தத்தை யடையுமே யன்றி மற்றபடி என் மனத்திற்கு அமைதி என்பதே ஏற்படாது.'' என்று வருந்திய படியே கூறினாள்.

இது கேட்ட கணவன் ''இதென்னவிது நவநீதம்! உனக்கு யான் கூறுவது முற்றும் சிறிதும் செவியில் விழுவதில்லையே! உன்னுடைய மனத்தில் பக்தியும், கடவுளிடத்து உண்மையான நம்பிக்கையும் இருக்கும்போது நீ ஏன் வீணே கவலைப்படவேண்டும்? பெண்களின் மதி கண்ணாடிக்கு ஒப்பாக இருக்குமென்று நினைக்கிறேன். அதெப்படியெனில் கண்ணாடியில் நாம் நமது முகத்தைப் பார்க்குங்காலத்தில் நம்முடைய தோற்றம் எந்தவிதமாக இருக்கின்றதோ அதே அக்கண்ணாடியில் பிரதிபிம்பிக்கின்றது. அதேபோல் பக்திபண்ணுங்காலை தேகம் பரவசமடைந்து அதே நிலையில் மனம் லயித்துப்போய்விடுகின்றது. ஆனந்தமாக இருக்கையில் மனம் ஆனந்தரூபமாகவே மாறுகின்றது. கவலைப்படும்போதோ அதே நினைவுடன் மனம் ;கட்டுண்டுவிடுகின்றது. ஆகையால் எந்தெந்தக் காலத்தில் எந்தெந்தத் தோற்றத்தில் மனம் செல்லுகின்றதோ அதே நிலையில் நின்று தவிக்கின்றது. ஆதலால் உனது மனத்தை நீ இவ்விதம் சஞ்சலத்தில் ஆழ்த்தலாகாது. எல்லாம் அவன் விட்ட வழியே நடக்கும். அவனையே நம்பியிருந்தால் உன் மனக்கவலை உன்னிடம் நிலைக்காதொழியும். என் இன்பவல்லி! உன் மனமே

இவ்விதம் வருந்தினல் எனக்கு எவ்விதம் தேறுதல் உண்டாகும்? என் மனம் உறுதியை இழந்துவிடுமாயின் எனக்கு இது காறும் வந்துள்ள கீர்த்தி யெல்லாம் பூர்த்திபெறுது மடிந்துவிடுமே. இதை நீ கவனிக்கவேண்டாமா! என்னுடைய க்ஷேமத்தையே சதா கோறும் நீ என் மன உறுதியையும் கெட்டிசெய்து என்னைத் தட்டிக் கொடுத்து, அட்டகாசமாக அனுப்பி வேலையில் இருமடங்கு புகழ் பெற்று மட்டிலா மகிழ்ச்சியுடன் திரும்பிவந்து உன்னைக் கட்டியணைத்து முத்தமிட்டுக் கஷ்டம் களைந்து களிப்புறச்செய்யவேண்டாமா? அதைவிடுத்துச் சதா வருந்துவது அழகாகுமா?'' என்று கூறியபடியே அவளைச் சரேலென்று தூக்கித் தனது மடிமீதமர்த்தித்தனது அன்பாகிய நன்முத்துக்களைக் காதலென்னும் கயிற்றினுல் கோர்த்து அவளுக்கணிவித்தான்.

இந்த முத்தாரம் அணியப் பெற்ற மின்னிடையாள் பேசத் தொடங்கி, "என்னுருயிர்த் துரையே! தாங்கள் கூறியதெல்லாம் உண்மைதான். எனினும் இப் பாழும் மனத்திற்கு மட்டும் உறுதி என்பது தோன்றவில்லையே! அவ்விதம் உறுதி பெறக் கூடாத விதமான நிகழ்ச்சிகளும் சில நிகழ்கின்றன. அதாவது:— நேற்றுத் தாங்கள் வரும் வழியை எதிர்நோக்கியவாறு மேன்மாடியில் நின்றுகொண்டிருந்தேன். அப்போது வீதியில் 4, 5 பேர்வழிகள் ஏதோ பேசிக்கொண்டே சென்றூர்கள். அவர்கள் அகஸ்மாத்தாக இவ் வீட்டையும் என்னையும் பார்த்து முதலில் ஏதோ மெல்லக் குசுகுசு என்று பேசிக்கொண்டார்கள். பின்னர் உரத்த குரலால் என் காது கேட்கும்படியாகப் பேசத் தொடங்கி "அடேய்! இந்த வீடுதான் அந்தப் போலீஸ் இன்ஸ்பெக்டர் வீடு; அதோ அந்தப் பொம்பளைதான் அவன் பொஞ்சாதி. இந்த இன்ஸ்பெக்டரை எவ்விதமாவது ஒரு கை பார்க்கவேண்டும். பாவி எப்படியோ மாறுவேடம் பூண்டு நம்பளை பிடித்துச் சிறையில் வைத்து நமது வேலைகளையெல்லாம் கெடுத்துவிட்டான். அதோடு நம்முடைய மற்ரெரு கூட்டத்தவரையும் பிடிப்பதற்கு வழிதேடிக்கொண்டே இருக்கிறுனும். அதற்குள்ளாக நாம் அவனை அமுக்கிவிடவேண்டும்'' என்று கூறிக்கொண்டு ஆத்திரத்

துடன் வஞ்சம் வைத்துக்கொண்டு சென்றார்கள். இதைக் கேட்டது முதல் எனது மனம் குழப்பத்தையும் சங்கடத்தையும் அடைந்து தவிக்கின்றது. தாங்கள் வெளியில் சென்றிருக்கும் நேரத்தில் தங்களுக்கு அத் துஷ்டர்கள் ஏதேனும் ஆபத்தை விளை வித்து விடுவார்களோ, அல்லது உயிருக்கே ஹானி தேடி விடுவார் களோ என்ற பற்பல எண்ணங்கள் என் மனத்தில் தோன்றி என் னைக் கொன்றுகொண்டே இருக்கின்றன யான் என்னசெய்வேன்? இதை நினைக்கும்போதே எனது மனம் பகீர் என்கிறது! தாங்கள் வெளியில் செல்லாது வீட்டிலேயே இருக்கும் வரையில் மனது சற்றுச் சமாதானமாக இருக்கிறது. வெளியில் சென்று விட்டாலோ என் மனம் படும் பாட்டை அந்த சர்வேச்வரனே யறிவான்'' என்று கூறும்போதே அவள் கண்களிலிருந்து நீர் தாரை தாரையாக வழிந்தோடிற்று.

இதைக் கண்ட கிருஷ்ணன் தன்மீது தனது மனைவி அபாரமான வாஞ்சை வைத்திருப்பதை நோக்கிச் சந்தோஷங் கொண்டு பேசத் தொடங்கி, "என் உயிரினு மினிய கண்ணே! உம். நீ இவ்விதம் யாரோ பேசியதைக் கண்டு பயந்துவிடுகின்றாயே! என்னைப்போலவே போலீஸில் வெகு காலமாக வேலையாக விருந்து பின் துப்பறியும் தொழிலில் மிகவும் பிரக்கியாதி பெற்று விளங்கும் நமது துப்பறியும் ராஜாராம் நாயுடுவின் வரலாற்றைக் கேட்டால் நீ என்ன சொல்வாயோ! ஒவ்வொரு கேஸ்களிலும் அவர் இறங்கிவிட்டால் அதனால் அவருக்கு நேரும் ஆபத்துக்கள் கொஞ் சமா! அதைக் கூறவும் வாய் கூசுகின்றது. எத்தனையோ விரோதிக ளால் பலவித இடுக்கண்களுக் கெல்லாம் இலக்காகியே தமது புகழ்க் கொடியைப் புவி யெங்கும் நாட்டிவிட்டார். அதைவிட என் விஷய மென்ன பிரமாதமானதா! உலகத்தில் எப்போது ஜனித்தோமோ அப்போதே சகல வேலைகளிலும் தைரியம் கொள்ளவேண்டும். கடவுளின்மீது பாரத்தைச் செலுத்தித் தைரியமாக இருந்தால் ஒரு பயமுமில்லை. ஆபத்தே நேராது. ஆகையால் இவ் விஷயத்தைப் பற்றி இனிக் கவலை கொள்ளாதே. நேரமாய்விட்டது; நித்திரை கொள்வாய் கண்மணி'' என்று வெகு உருக்கத்துடன் கூறினான்.

இதைக் கேட்ட நவனீதம் சிறிது மனந் தேறியவளாய்க் கடவுளை மனத்தில் தோத்திரஞ்செய்தாள். பின் தான் காய்ச்சிக்கொண்டு வந்திருந்த பாலைத் தன்கணவனுக்குக் கொடுத்து மிஞ்சியதைத் தான் அருந்தினுள். அப்பால் சயனித்துக்கொண்டிருக்கும் தன் பதிக்கு விசிறிக்கொண்டே நின்ருள். இரவு நேடுநேரமாய் விட்டதாலும் இனிமையான விசிறியின் காற்றினுலும் அவன் மெய் மறந்து ஆநந்த மயமான நித்திரையிலாழ்ந்தான். கணவன் துயின்ற பின்னர் நவநீதமும் சயனித்துக் கொண்டாள். நவனீதத்தின் சித்தம் சஞ்சலித்துக்கொண்டே யிருந்ததால் அவள் சரியான தூக்க மின்றிப் புரண்டு கொண்டிருந்தாள். அத் தருணம் "டிணிங், டிணிங்" என்று டெலிபோன் மணி அடித்த சத்தங் கேட்டது. நவநீதம் அதனருகிற் சென்று "யார்? எங்கிருந்து கூப்பிடுகின்றீர்கள்?" என்று விசாரித்தாள். அதற்குப் பதில் "போலீஸ் கமிஷனர் ஓர் அவசரமான கேஸ் விஷயமாக உடனே இன்ஸ்பெக்டரை வரும்படியாக உத்தரவு செய்கிருர். அர்ஜெண்டு சீக்கிரம் வரவும்" என்று வந்தது. இதைக் கேட்ட நவநீதத்தின் மனம் சலித்தது. இப்போதுதான் நித்திரை செய்யப் படுத்து அயர்ந்து கண் வளர்பவரை உடனே நாம் எவ்விதம் எழுப்புவது? பேசாதிருந்து விடலாகுமா!" என்று யோசிக்கின்ருள். அவ்வாறிருப்பின் அதனுல் தன் கணவனின் மேல் குற்றமேற்படுமாதலால் அவனை மெல்ல எழுப்புவதென்றே தீர்மானித்து அவனருகில் சென்று "நாதா! பிராணநாதா!" என்று அழைத்தாள்.

உடனே சட்டென எழுந்த கிருஷ்ணன் செய்தியை அறிந்து தனது உடுப்புகளை எடுத்தணிந்து கொண்டு நவநீதத்தை நோக்கி "என் கண்ணே! வருந்தாதே; யான் சென்று உடனே திரும்பி வருகிறேன். நீ கதவைத் தாளிட்டுக்கொண்டு சயனித்துக்கொள். விழித்திருந்து வருந்தாதே" என்று தேறுதல் கூறிவிட்டுப் பின் ஸ்டேஷனை நோக்கி நடந்தான். கணவன் சென்றதும் அவள் கதவைத் தாளிட்டுக்கொண்டு உள்ளே வந்து கடவுளின் மீதே தியானமாகத் தன் கவனத்தைச் செலுத்தியபடியே படுத்திருந்தாள். பின்னர் சிறிதுநேரத்திற்கெல்லாம் அவ் வீட்டில் ஏதோ ஓர் விதமான

182852

சந்தடியும், சத்தமும் கேட்டன. இதை யறிந்த நவநீதம் திடுக் கிட்டு மெல்ல எழுந்து தன் னறைக் கதவின் இடுக்கினால் உற்று நோக்கினாள். ஆகா! அங்குச் சில தடியர்கள் கையில் கொளுத்திய பாக்கெட் விளக்குடன் நிற்பதைக் கண்டது தான் தாமதம்! அவளு டையகுடல் நிலை புரண்டுவிட்டது. மார்பு துடிக்க, உயிர் தத்தளிக்க அவள்இன்னது செய்வதென்பதை யறியாது கல்லாய்ச் சமைந்து நின்றுவிட்டாள்.

2—வது அதிகாரம்

தாஞ்சா பஹதூர் மூஞ்சூறு பித்தன்.

"ஆண்டவனருளினால் நாம் இதுபரியந்தம் ஸ்தல யாத் திரை செய்துவந்த இடத்திலெல்லாம் நமக்கு ஒருவிதமான கஷ்டமு மில்லாது வந்து விட்டோம். இந்த ஊரில் தான் நமக்குச் சற்றுக் கஷ்டம் நேரும் போல விருக்கிறது; அக்கிரகாரமே காணப்பட வில்லை. விசாரித்ததில் பக்கத்து ஊரிலிருந்து ஓர் குருக்கள் இங்கு வந்து ஸ்வாமிக்கு நிவேதனம் செய்துவிட்டுப் போகிறாராம். ஆகையால் நாம் பட்டினி கிடக்க நேரும் போலிருக்கிறது. சரி நாம் குளத்திற்குச் சென்று ஸ்நானம் செய்துவிட்டு வரலாம்; வாருங்கள்" என்று இருவர் தமக்குள் பேசிக்கொண்டே, குளத்தை யடைந்து வஸ்திரம் துவைத்துக் கொண்டு ஸ்நானத்தைச் செய்து விட்டு விபூதி யணிந்து வெளியே வந்து அவ்வூரிலுள்ள கோயிலை அடைந்தார்கள். அக் கோயிலிலுள்ள ஸ்வாமியைத் தரிசனம் செய்துவிட்டு அன்று சாப்பாட்டிற்கு என்ன செய்வதென்று யோசித்தவாறு உட்கார்ந்தார்கள்.

அத்தருணம் வயது முதிர்ந்த ஓர் மாது அவ்வழியே சென்றாள். அங்கு விபூதியும் ருத்திராக்ஷமும் அணிந்து கொண்டு வெகு வைதிகமாயுட்கார்ந்திருந்த அவர்களைக் கண்ட அக்கிழவி அவர்க ளெதிரில் வந்து வணங்கி எழுந்து, கோவெனக் கதறி யழுதாள். இவள் காரணமின்றித் திடீரென்று புலம்புவதைக் கண்ட அவர்கள் "ஏனம்மா! காரணமின்றிப் புலம்புகின்றீர்களே?

உங்களுக் குற்ற ஆபத்து யாது? கூறுங்கள்!'' என்று வெகு அன்புடன் கேட்டார்கள்.

இதுகேட்ட அம்மாது ''சுவாமிகளே! தங்களைப் பார்த்தால் சாஸ்திரம், ஜோதிஷம் முதலியவை கற்றவர் போன்று தோற்று கின்றது. ஆகையால் எனக்கு சற்று ஜோஸியம் சொல்லவேண்டும்; அதற்குத் தான் வந்தேன். என் கவலையை எண்ணினால் எனக்கு வருத்தமாக விருக்கிறது; அதனால் புலம்பிவிட்டேன்; ஐயா ஸ்வாமி களே! பல வருஷங்களுக்கு முன், எனது புதல்வன் திடீரென்று காணாமல் போய்விட்டான்; நாங்கள் எங்கு தேடியும் அவனை இது பரியந்தம் காண முடியவில்லை. அவன் செல்லும்போது அவ னுக்கு 10 வயது கூட நிரம்பியிராது. அவன் இன்ன விடத்தி லிருக்கிறான் என்பதுவும் தெரியவில்லை. எத்தனையோ மந்திரம், தந்திரம், ஜோஸியம், ஆரூடம் முதலிய எல்லாம் பார்த்தாயின. அவனிருக்கு மிடமே தெரியவில்லை. ஒருகால் அவன் உயிருடன் இருக்கின்றானோ; இறந்துவிட்டானோ; ஒன்றும் தெரியவில்லை. அவன் இக்காலத்திய பிள்ளைகளைப் போன்றவனல்ல. வெகு சாது; உலக வியலே யறியமாட்டான். கள்ளம், கபடம் தெரியாது. படித்தவனு மல்ல. அவனுக்கு சதா விளையாட்டிலேயே நாட்டமாகையினால் கோலி விளையாடுவதையே அவன் அதிகமாகக் கொண்டு ஓயாது ஆடு வான். அந்தக் கோலி விளையாட்டில் தாஞ்சாபகதூர் என்று ஒன்று வருகின்றதாம். அதை யவன் ஓயாது கூறிக்கொண்டிருப்பான். அதனால் அவனுடன் கூட விளையாடும் பிள்ளைகளெல்லாம் பரிகாஸ மாக நகைத்துக்கொண்டே அவனைத் தாஞ்சா பகதூர் என்றே கூப்பிடு வார்கள். ஆகையால் அந்தப் பெயரே அவனுக்கு வழங்கி விட்டது. அவனுடைய தந்தை நோய் கொண்டு படுத்திருந்த தருணம் அவன் திடீரென்று காணாது போய்விட்டான். நாங்கள் அதிகமான செல்வந்தர்களல்ல வாகையினால் பல தேசங்களுக்குச் சென்று பார்க்கவும் கூடாது போயிற்று. போலீஸிலும் தகவல் கொடுத் தோம்; அதிலும் பயன் படவில்லை. பல வருடங்களாய்விட்டன. தாங்கள் ஜோஸியம் பார்த்து அவனுடைய தகவலைச் சற்றுத் தெரி விக்கவேண்டுகிறேன்'' என்று கவலையுடன் கூறினாள்.

இதைக்கேட்ட அவர்கள் இருவரும் தமக்குள்ளாக "பேஷ் இன்று ஜீவனம் கிடைத்துவிட்டது" என்று கூறிக்கொண்டே, அக்கிழவியை நோக்கி "அம்மா! உங்களுடைய பிள்ளை உயிருடன் தான் இருக்கிறார். தற்போது எங்கிருக்கிறார் என்பதைப் பெரிய சக்கரமிட்டுப் பார்க்கவேண்டும். அதற்காக 50 ரூபாய் செலவாகும். அவ்வாறு செலவு செய்தால் கூற முடியும்; இல்லையேல் கஷ்டந் தான்" என்றார்கள்.

கிழவி:—ஐயா! நான் முதலிலேயே தெரிவித்தபடி பரம ஏழைகள் நாங்கள். நேற்றுத்தான் நெல்லு விற்று வருடாந்திரச் சாமான் வாங்கு வதற்காக 25 ரூபாய் கையில் வைத்திருக்கிறேன். அதில் 5 ரூபாய் வேண்டுமானால் தருகிறேன்; தயவுசெய்து பார்த்துச் சொல்லிவிடுங்கள்.

ஒருவன்:—பேஷ்! 50 ரூபாய்க்கும் 5 ரூபாய்க்கும் மலைக்கும் மடுவிற்குமாக வல்லவா இருக்கிறது? நாங்களென்ன அந்தப் பணத்தை விழுங்கி விடுவோமா! திரும்ப அதை நீங்களே பெற்றுக் கொள்ளலாம். அந்த 25 ரூபாயை மட்டுமேனும் வையுங்கள். அதைக் கொண்டு சொல்கிறேன்.

கிழவி:—சுவாமிகளே! திரும்ப ரூபாயை எவ்விதம் நானடையக் கூடும்? சுவாமிகள் செலவு செய்ய வேண்டு மென்று சொன்னீர்களே?

ஒருவன்:—அம்மா! செலவென்றால் சுவாமிக்கு சாமான்களாக வைப்பதற்குப் பதிலாகப் பணத்தையே வைத்து வேண்டுவதும் ஓர் வழக்கம் உண்டு. ஆதலால் நாங்கள் பூஜை செய்த பின்னர் தாங்கள் அதை எடுத்துச் செல்லலாம்—என்றான். உடனே கிழவி புத்திர வாஞ்சையினால் 25 ரூபாயை எடுத்து சுவாமிகளின் கையில் கொடுத்தாள். அதை வாங்கியவன் "அம்மா! தரும சாஸ்திரம் உங்களுக்குத் தெரியுமா?" என்றான்.

கிழவி:—எனக்குப் படிக்கவே தெரியாது. ஏதோ பெரியவர்கள் கூறக் கேட்ட சில விஷயங்கள் தான் தெரியும். அதாவது:—

"உலகத்தில் எந்த விதத்திலும் தருமத்திற்கு விரோதமாக நடக்கக் கூடாதென்றும், நியாயம் பிசகிப் பேசக் கூடாதென்றும், பிறர் சொத்தை அபகரிக்கலாகாதென்றும், ஒருவருக்குத் தானமாகக் கொடுத்தவஸ்துவைப் பின்னுல் திரும்ப வாங்கக் கூடாதென்றும், பிறரை வஞ்சிக்கலாகாதென்றும், பெரியாரைத் தூஷிக்கலாகாதென்றும் இவை போன்ற பல உள. ஏன் எதற்குக் கேட்டீர்கள் சுவாமிகாள்!" என்ருள். இது கேட்ட ஒருவன் "ஒன்றுமில்லையம்மா! உங்களைப்பார்த்தால் தர்மதேவதைபோலத்தோன்றியதால் கேட்டேன். சரி இதோ ஜோஸியம் பார்க்கிறேன்" என்று கூறியவாறு கீழே பூமியில் ஒரு சக்கரம் போட்டு அதில் கிழவியை உட்காரச் சொல்லி அவளை நோக்கி "அம்மா! இச் சக்கரத்தில் உட்கார்ந்தபடியே கண்ணைக்கெட்டியாக மூடிக்கொண்டிருங்கள். வடமூலையிலிருந்து தென் மூலையின் பக்கமாக ஓர் ஜோதி தெரியும்; அப்போது கண்ணைத் திறந்து பார்த்தால் தங்கள் புதல்வரை நேரில் காணலாம். அந்த ஜோதி தெரிவதற்கு முன் எக்காரணம் பற்றியும் கண்ணைத் திறக்கலாகாது" என்று கூறினுன். உடனே கிழவி கண்ணைக் கெட்டியாகத் தன் முன்தானையின் ஓர் பாகத்தினுல் இறுக்கிக் கட்டிக்கொண்டு உட்கார்ந்தாள். இருவரும் நகைத்தபடியே, "அம்மா! தரும தேவதை என்றுல் உங்களுக்கே தகும். தாங்களே எங்கள் கையில் இஷ்டத்துடன் கொடுத்த பணத்தைத் தரும நியாயத்திற்கு விரோதமாக வாங்கிக்கொள்வது அழகாகாது அல்லவா! ஆகையினுல் அதை நீங்கள் கேட்கமாட்டீர்கள் என்பது உங்கள் வாயிலிருந்தே வந்துவிட்டது; இனிப் பயமில்லை. உங்கள் பிள்ளை மண்மீதோ, விண் மீதோ இருப்பது நிச்சயம். ஆகையால் நீங்களும் உயிர் துறந்து உங்கள் குமாரரும் சிவபதமடைந்து விட்டால் இருவரும் அங்கு சந்தித்துப் பார்ப்பது திண்ணம். அதற்கு மத்தியில் ஒருகால் பார்த்தாலும் பார்க்கலாம்; நாங்கள் சென்று வருகிறோம். எங்களுக்குப் பல தினங்களுக்குக் குறைவின்றிப் போஜன மளித்த புண்ணியம் உங்களைக் காக்கும்" என்று கூறிக்கொண்டே இருவரும் ஓட்டமெடுத்தார்கள்.

இவர்கள் பேசியதைக் கேட்ட கிழவி பதறியவாறு "ஐயோ! போய்விட்டார்களே! பணத்தைக் கொள்ளையிட்டுக்கொண்டு போய்

விட்டார்களே!" என்று கத்திக்கொண்டே எழுந்து தன் கண்களைக் கட்டியிருந்த கட்டை அவிழ்த்துக்கொண்டு அவர்கள் சென்ற திக்கைக்கவனிக்க நாற்புறமும் பார்த்தாள். எங்கும் அவர்களைக் காணவில்லை. கிழவியின் வயிறெரிகின்றது. ஐயோ ஐயோ என்று கத்தியவாறு தாறுமாறுக ஓடத் தலைப்பட்டாள். எங்கு ஓடியு மவர்களைக் காணமல் "ஐயோ! புத்திர வாஞ்சையால் மோசக் காரப் பாவிகளை யெல்லாம் நம்பிப் பாழாகிவிட்டேனே! கையிலிருந்த பணமும் வழிப் பறிகொள்ளை போலாய்விட்டதே!" என்று கத்தியவாறு பக்கத்து ஊராகிய தன் ஊரை யடைந்து தன் மக்கள் மனிதரிடத்தில் இச் செய்தியைத் தெரிவித்தாள்.

இதைக் கேட்ட எல்லோரும் ஆத்திர மடைந்து "அந்தப் பயலை எவ்விதமேனும் தேடிப் பிடித்து விடுகிறோம் பார்" என்று தேற்றிஞர்கள். கிழவி புத்திர சோகத்தினுல் தவிப்பதுடன் தன் கையிலிருந்த பணமும் பாழாகி விட்டதை எண்ணிக் கண் கலங்கியவாறு "அப்பா! சிதம்பரம்! உன்னை இனி யான் என்னுயுளிற் காண்பேனே! என்னருமை மகனே!" என்று புலம்பி வருந்தினுள்.

இக் கிழவியின் மகன் தனது இளமைப் பிராயத்தில் அறியாமையினுல் கல்வி கற்காது விளையாட்டிலேயே தனது கவனத்தைச் செலுத்திக் கோலி யாட்டத்தின் பயனுகத் தாஞ்சா பகதூர் என்கிற திருநாமத்தைப் பெற்றுப் பேதையாயும் சாதுவாயும் திரிந்து கொண்டிருந்த காலத்தில் அவனுடைய தந்தைக்கு தேக அசௌக்கியமேற்பட்டு அதனுல் வெகு பாதை பட்டுக் கொண்டிருக்கையில் வைத்தியர்களெல்லாரும் வந்து தம் தம் முறைப்படி சிகிச்சை செய்தும் அவருடைய வலி தீராமையால் கடைசியாக வந்த ஓர் மூட மருத்துவன் பணத்திற் காசைப் பட்டுக் கொண்டு ஏதோ மருந்து கூறுவது போலக் கூறிவிட்டுப் பணத்தை யடித்துக் கொண்டுபோக வெண்ணி நோயாளியைக் கவனித்துப் பின்னர் ஏதோ ஓர் சூரணத்தைக் கொடுத்துவிட்டு "முஞ்சூறின் புழுக்கையைக்கொண்டு வந்து அதோடு இம்மருந்தைச் சேர்த்தரைத்துப் பூசினுல் வலி குணமாகிவிடும்" என்று கூறிவிட்டுப்போய்விட்டான்.

இந்த மருத்துவன் கூறியவற்றை வெகு கவனத்துடன் கேட்டுக்கொண்டிருந்த நமது தாஞ்சாபஹதூரின் மனத்தில் ஓர் தீவிரமான ஊக்கம் உண்டாய்விட்டது. அதாவது "மூஞ்சூறு புழுக்கையைக் கொணர்ந்து அதை நம் பிதாவுக்கு அறைத்துப் பற்றுப் போட்டு விட்டால் அந்தப் புகழை நாமே அடைந்து விடலாம்; 'இத்தனை பெரியவர்கள் எல்லாம் இருக்கையில் இச்சிறுவன் ஆர்வத்துடன் முன் வந்து தனது பிதாவின் பிணிக்கு மருந்து தேடியளித்துக் காப்பாற்றினான்' என்று எல்லோரும் நம்மைக் கொண்டாடி அபாரமாய்ப் புகழ்வார்கள். அதை விடக் கீர்த்தி வேறு யாது வேண்டும்? நாம் இதைச் செய்து விட்டால் வெகு உன்னதமான நிலைமையை அடைந்து விடலாம். அதன் மேல் நம்மை நமது பெற்றோரும் உற்றோரும் கொண்டாடி மகிழ்வார்கள். ஆகையால் நாம் இப்போதே மூஞ்சூறின் புழுக்கையைக் கொணர்ந்து நமது தந்தையின் பிணியை அகற்றவேண்டும்" என்று தீர்மானித்து விட்டான்.

அவ்வாறு தீர்மானித்தானே யன்றி மூஞ்சூறு என்பது எப்படியிருக்கும், அது எங்கு கிடைக்கும் என்பதை யவன் அறியமாட்டானகையினால் அது பற்றி அவனுக்குக் கலக்க மேற்பட்டு விட்டது. "அந்த மூஞ்சூறு இருப்பிடத்தையும் அது எவ்வித மிருக்கு மென்பதையும் யாரைக் கேட்டுத் தெரிந்து கொள்வது. அவ்விதம் யாரை யேனும் கேட்டால் அந்த வேலையை அவர்களே செய்து விட்டால் அதன் மேல் அப்புகழை நாமடைய ஏது வில்லாது போய் விடுமே! இந்தத் தரும சங்கடத்திற்கு என்ன செய்வது? இதை எவ்விதமேனும் தெரிந்து கொண்டு நம் பிதாவின் நோயை நாமே தீர்த்துப் புகழை யடையவேண்டும்" என்று அவன் தீர்மானித்துக்கொண்டு வீட்டிலேயே அதைத் தெரிந்து கொள்ளும் பொருட்டு "சோறு! சோறு! மூஞ்சூறு! நீரு! நீரு! திரு நீறு! என்று இராகமாய்ப் பாடிக் கொண்டே யிருந்தான். இவ்விதம் செய்தால் அந்த மூஞ்சூறின் தகவலையறிந்து கொள்ளலாமென்பது அவன் கருத்து. அக்கருத்துடன் மேற் குறித்தவாறு பாடுவதைக் கேட்ட அவன் தாயாரும் மற்றையோரும் அவனிடத்தில் கடுங் கோபங்கொண்டு அவனைக் கண்டு கோபித்து "நீ நாசமாய்ப் போக

உன்னெழவெடுக்க! வீட்டில் அப்பன் சாகுந்தறுவாயில் அவதிப் பட்டுக் கொண்டிருக்கையில் சிறிதும் கவலே கொள்ளாது பேய்க் கூச்ச லிட்டுப் பித்தம் பிடித்தவன் போலப் பாடுகிருயா! சீ வீட்டை விட்டுத் தொலேந்து போ! தடிப்பிணமே! எல்லோரும் சங்கடப் பட்டுக் கொண்டிருக்கையில் பாட்டாம்! பாதாளியாம்'' என்று கடிந்து அவன் கன்னத்தில் தபீர் தபீர் என்று அறைந்தார்கள்.

அந்த அடியையும் திட்டையும் பெற்றுக் கொண்ட சிதம்பரம் அழுது கொண்டே புறக்கடைப் பக்கமாகச் சென்றுன். அப்போது பக்கத்து வீட்டுக்காரி ''ஐயோ! இழவே! இப்போது அந்தக் காயை நறுக்கி வைத்து விட்டு வந்தேன்; இதற்குள் அப்பாழாய்ப்போன மூஞ்சூறு அவைகளைக் கடித்து விட்டுச் சாக்கடையில் போய்ப் புகுந்து கொண்டதே! அது நாசமாய்ப் போக! மூஞ்சூறு உபத்திரவம் சகிக்கக் கூடவில்லையே!'' என்று தன் போக்கில் சொல்லிக் கொண்ட வார்த்தைகள் நமது தாஞ்சாபகதூரின் காதில் விழுந்தன. உடனே அவன் அழுகை நின்றுவிட்டது. நாம் இனி மூஞ்சூறு இருப்பிடத்தையறிந்து கொண்டு விட்டோம். சாக்கடையில் தான் அதன் வாசம் போல இருக்கிறது. நல்லது. நாம் வீட்டுச் சாக்கடையிலேயே தேடினல் இதை யாரேனும் கண்டு கொண்டு நம்மைத் திட்டுவதுடன் அந்த மூஞ்சூறு மிருகத்தையும் கண்டு பிடித்துப் புகழைத் தாமே சம்பாதித்துக் கொள்வார்கள். இன்னும் சிறிது நேரம் சென்றல் நன்றக இருட்டிவிடும். அதன் பின்னர் எல்லாவீட்டுச் சாக்கடைகளும் ஒன்றகச் சேர்ந்து பின்புறத்தில் பெரிய கால்வாயாகப் போகின்றதே அதில் போய்த்தேடினல் நமக்கு நிறையப் புழுக்கையும் புழுக்கையிடக்கூடிய மூஞ்சூறும் கிடைக்கும். அதைக் கொண்டு நம் பிதாவின் நோயைக் குணப்படுத்துவதுடன் அந்த மூஞ்சூறைப் பெட்டியில் வைத்துப் பூட்டி ஜாக்கிரதையாக வைத்திருந்தால் பின்னர் யாருக்கு தேக அசௌக்கியம் நேரிட்ட போதிலும் அவர்களுக்கு இதைக்கொண்டே நாம்குணம் செய்து வந்தால் நாமும் ஓர் பிரபல வைத்தியனுய்விடலாம். நம்மிடம் இந்த வைத்தியமுறை இருப்பதையறிந்து நம்மைத்தேடிக்கொண்டு ஆயிரக் கணக்கில் நோயாளிகள் வருவார்கள். அவர்களையெல்லாம் குணப்

படுத்தினல் நிறையப் பணம் கிடைக்கும். அதன்மேல் நாம் பெருத்த சீமானுக ஆய்விடுவோம். நம்மை எல்லோரும் பிரபுவாகக் கொண்டாடுவார்கள்.'' என்று இவ்விதமான யோசனைகளையெல்லாம் செய்துகொண்டு அன்று அஸ்தமிக்கும் நேரத்தை எதிர்பார்த்திருந்தான்.

அஸ்தமித்து நன்றாக இருட்டிவிட்டது. உடனே அவன் வெகு தைரியமாய்ப் பின்புறத்து வீதியை அடைந்தான். அவ்வூர் சுத்த நாட்டுப்புறமாகையால் எல்லாவீட்டுச் சாக்கடைகளும் ஒன்று கூடிப் பெரிய கால்வாய் போலப் போய்க்கொண்டிருந்தன. அதோடு சத்தமும் அடங்கிவிட்டது. ஆகையால் ஒருவிதமான இடையூறுமின்றி நமது தாஞ்சா பகதூர் சாக்கடையில் கையைவிட்டுத் துழாவிக்கொண்டே அது எம்மட்டும் செல்கின்றதோ அதுவரையில் சலிக்காது போகத் தீர்மானித்தவனுகிப் போய்க்கொண்டேயிருக்கிருன். அச்சாக்கடையில் உள்ள தவளை, புழுக்கள் முதலியவற்றையெல்லாம் தட்டும்போது பிடித்துப் பார்க்கிருன். மழைக்காலங்களில் கண்ணெதிரிலேயே தவளைகளை அவன் பார்த்திருப்பதால் அவை மூஞ்சூறல்லவென்பதையறிந்து போட்டுவிடுகிருன். அவன் தேடும் வஸ்து சாக்கடையிலிருப்பது உண்மையானலன்றோ அது அங்கு கிடைக்கும். ஒன்றிரண்டு இருப்பினும் ஓட்டமெடுத்துவிடுவதால் அவனுக்கு பலன் கிடைக்கவில்லை. வெகுதூரம் தேடிக்கொண்டே சென்ருன். கிருஷ்ணபக்ஷமாதலால் இருள் கப்பிக்கொண்டிருந்தது. சாக்கடைக்கால்வாய் மற்ருெரு கால்வாயுடன் கலந்துகொண்டது. அந்தக் கால்வாயையும் சாக்கடைதான் என்று தீர்மானித்துக்கொண்டு அதிலும் இறங்கிக் கையாலும் காலாலும் துழாவிக்கொண்டே நெடுந்தூரம் போய்விட்டான். அங்கும் மூஞ்சூறு அகப்படாமையால் மிகுந்த வருத்தத்தையும் கவலையையு மடைந்து சோர்ந்துவிட்டான். "ஐயோ! இன்னும் அந்த மூஞ்சூறு மிருகம் அகப்படவில்லையே! நாம் எங்குதான் இனித் தேடுவது? அந்தம்மாள் சொல்லியதிலிருந்து சாக்கடையில்தான் கிடைக்கும் என்று தெரிந்துகொண்டு தேடியும் அந்தப் பக்காப் பேர்வழியாகிய மூஞ்சூறு நம்மை ஏமாற்ற எண்ணுகிறதே! என்ன செய்வேன்? ஏ! மூஞ்சூறு! உன்னை நான் விடமாட்

டேன். எப்படியிருந்தாலும் பிடித்துவிடுகிறேன் பார்.'' என்று சபதம் செய்துகொண்டு பின்னும் கால்வாயில் தேடிக்கொண்டே அது செல்லும் வழியாகவே சென்றுவிட்டான். வெகுதூரம் சென்று அக்கால்வாய் ஓர் குட்டையுடன் கலந்துகொண்டது. அதைக்கண்ட அவன் திடுக்கிட்டான். அக்குட்டையில் கை வைக்கவும் பயந்து விட்டான். அதன் கரைமீது நின்றபடியே "ஐயோ! இது மகா பொல்லாது; இதில்தானே நமது கொள்தாத்தா இறந்துவிட்டதாக வீட்டில் சொல்லிக்கொள்வார்கள். ஆகையால் இதில் நாம் இறங்கலாகாது........ஆ! இப்போதுதான் எனக்குச் செய்தி விளங்குகின்றது. அதாவது அந்த மூஞ்சூறு மகா கொடிய மிருகம் என்பது இப்போதுதான் தெரிகிறது. நாம் இதுகாறும் சாக்கடையில் தேடுகையில் நமது காலில் சுறுக்கு சுறுக்கு என்று குத்தியது. அவ்விதம் ஏன் செய்ததென்றால் நாம் அதைப் பிடித்துவிடுவோம் என்பதை அது தெரிந்துகொண்டுவிட்டதால் நம்மையே அது கொன்றுவிடுவதற்காகக் குத்திப்பார்த்தது. அதற்கு நாம் சாகாமல் சாமர்த்தியமாய்த் தேடிவருவதால் அது நம்மீது ஆத்திரங்கொண்டு இந்தச் சாக்கடையை இந்தக் குட்டையுடன் கலக்கச்செய்து விட்டால், நாம் இதில் விழுந்து இறந்துவிடுவோம் என்கிற எண்ணங்கொண்டு இவ்விதம் சூழ்ச்சி செய்திருக்கிறது. இதை நான் மகாசாமர்த்தியமாகத் தெரிந்து கொண்டுவிட்டேன். "ஏ மூஞ்சூறு! நீயா என்னை ஏமாற்றப் பார்க்கிறாய்? இதோ உன்னை எவ்விதமாவது பிடித்துவிடுகிறேன். என் சாமர்த்தியத்தை என்னவென்று பார்த்தாய்? படிக்காமலும், எழுதாமலும் கோலியாடியே நான் தாஞ்சாபகதூர் என்கிற பட்டம் பெற்றவன்என்பதை மறந்தாய்போலும். இதில் இறங்காமலே உன்னை யான் எவ்விதமேனும் பிடித்துவிடுகிறேன் பார்.'' என்று கூறிக்கொண்டே அதன் கரை மீது சற்று நின்றான்.

அங்கு நின்றபடியே நாற்புறமும் சுற்றிப்பார்த்தான். நக்ஷத்திரத்தின் ஒளியால் சிறிது வெளிச்சம் தெரிந்தது. அவ்வெளிச்சத்தில் அக்குட்டையினின்றும் மற்றொரு புறமாக ஓர் கால்வாய் வயல்களுக்குச் செல்வதைக் கண்டான். உடனே அவன் அளவிலா ஆனந்தங் கொண்டு அக்கால்வாயையும் சாக்கடை

என்றே எண்ணி அதிலிறங்கித் தேடிக்கொண்டே வயல் பக்கம் சென்றுவிட்டான்; வயல்களில் செல்லும் கால்வாய் களிலெல்லாம் துளைந்து கொண்டே வெகு தூரம் சென்று தன் ஊரையும் கடந்து வேறொரு ஊரையும் அடைந்து விட்டான். அங்கு கால்வாய் வயலுடன் நின்று விட்டதால் மெத்த வருத் தத்தை யடைந்து வயலை விட்டு வெளியே சிறிது தூரம் சென்றான்.

அங்கு வீடு வாசல்கள் இருப்பதைக் கண்டு இது ஓர் ஊர் என்பதை மட்டும் அவன் அறிந்து கொண்டான். இனி தான் எங்குச் சென்று எவ்விடத்தில் மூஞ்சூறைப் பிடிப்பது என்ற யோசனை யுடன் இத்தனை நேரம் விழித்திருந்து தேடிய அலுப்பினால் "அம்மாடீ!" என்று கூறியவாறு ஓர் வீட்டு திண்ணையின் மேல் வந்து அவன் உட்கார்ந்தான். அந்த வீட்டின் உட்புறத்தில் நோய் கொண்ட குழந்தை ஒன்று அழுதுகொண்டே இருந்தது. அந்தக் குழந்தையின் தாயார் மிகுந்த சலிப்பும் கோபமும் கொண்டு, "ஐயோ கர்மமே! இந்த எழவு பிள்ளை எந்நேரம் பார்த்தாலும் மூஞ்சூறுபோலக் கத்திக்கொண்டே தானும் நித்திரை செய்யாது என்னையும் தூங்கவிடாது உபத்திரவிக்கிறதே என்ன செய்வேன்? என் தலை விதியா இது!" என்று கூறியதை நமது சிதம்பரம் கேட்டுக்கொண்டிருந்தான். உடனே இவனுக்குப் புதுவிதமான உணர்ச்சியும் தெம்பும் உண்டாய்விட்டன. "அந்த மூஞ்சூறு என்பது ஓர் மிருகமாகத்தான் இருத்தல் வேண்டும். ஏனெனில் குழந்தை கத்துவது போல அம்மூஞ்சூறும் கத்தும் என்பது இந்தம்மாள் கூறியதிலிருந்து விளங்கி விட் டது. இனி நாம் கஷ்டமின்றிச் சுலபமாக அந்த மிருகத்தைப் பிடித்து விடலாம்" என்று யோசித்தவாறு உட்கார்ந்தான். அவ னுக்கு இருக்கை கொள்ளவில்லை யாதலால் மீண்டும் எழுந்து வழி யோடு நடந்து சென்றான். ஒரு பாழும் வீட்டின் கூரையின் மீது இரண்டு பூனைகள் சண்டையிட்டுக்கொண்டு கத்தின. சண்டை யிடுகையில் பூனை கத்துவது குழந்தையழுவதுபோலவே இருக்கு மென்பது யாவருமறிந்த விஷயம். அவ்விதம் கத்திய சத்தத்தைக் கேட்ட நமது தாஞ்சாபகதூர் சந்தோஷத்தால் துள்ளிக் குதித்தான்.

"அதோ அக் கூரையின்மீது குழந்தை யழுவது போலக் கத்துகிறதே அது மூஞ்சூறு மிருகமாக விருக்கும். நாம் உடனே அதைப் பிடிக்கவேண்டும்," என்று எண்ணியவனாய்க் கூச்சலிடாமலும் சந்தடி செய்யாமலும் அவன் திண்ணைமீது ஏறிச் சுவரில் தொத்திக் கூரை மீது ஏறினான். இவனைக் கண்டவுடன் ஒரு பூனை ஓடிவிட்டது. கறேலென்று கரடி போலவும் கொட்டாப்புளி போலவும் இருந்த ஆண் பூனையை அதன் பின்புற மிருந்தபடியே அவன் தனது அங்க வஸ்திரத்தை யவிழ்த்து அதன் மீது வீசி அதைச் சடக்கெனப் பிடித்து மூட்டையாகக் கட்டிக்கொண்டான். அதைப் பிடித்து விட்ட சந்தோஷப் பெருக்கினால் "ஆகா! மூஞ்சூறு உன்னைநான் பிடித்துவிட்டேன் பார்த்தனையா? என்னையா நீ ஏய்த்துவிட எண்ணினாய்?" என்று கூறி மகிழ்ந்தவாறு அந்தப் பூனையைக் கட்டியுள்ள மூட்டையைத் தூக்கிக் கொண்டு கூரைமீதிருந்து கீழே இறங்கினான். அந்தப்பூனை குட்டையில் "ங்யாவ், ங்யாவ்" என்று கத்தியவாறு தத்தளிக்கிறது. இதுகண்ட மூடாத்மா நகைத்தவாறு "ஓகோ! அகப்பட்டு விட்டோமே என்று தத்தளித்துக்கொண்டு ஓடிவிடலாம் என யோசிக்கிறாயோ? இனி நீ ஒருகணமும் என்னிடமிருந்து தப்ப முடியாது" என்று கூறியவாறு அந்த மூட்டையை எடுத்துக்கொண்டு அவ் வீதியைவிட்டு வெகுதூரம் சென்று மைதானமான ஓர் இடத்தில் உட்கார்ந்து மெல்ல அம்மூட்டையை அவிழ்த்து அப்பூனையை வெளியில் விடாது கால்களைக் கட்டிவிட்டு நன்றாகக் கவனித்தான்.

"ஆகா! இது பூனையைப் போலல்லவா இருக்கிறது! பூனை வெளுப்பாயும் பட்டைபட்டையான வரிகளையுடைய தாயுமிருக்கும். இது கரேலென்று நிறைந்த மயிர்களுடன் கூடியதாயிருக்கிறது. ஆகையால் இது மூஞ்சூறுதான் என்பதில் சந்தேகமே இல்லை. இது நல்ல பெரிய மூஞ்சூறு. இதன் குட்டிகளாகிய சிறிய மூஞ்சூறே நம் காலைக் குத்தி நம்மை குட்டையில் தள்ளிக் கொல்லப் பார்த்தன. குட்டிக்கே அவ்வளவு துணிபு இருக்கையில் பெரிய மூஞ்சூறுக்கு எவ்வளவு துணிவிருக்காது? ஆகையால் இதை நாம் விடவே கூடாது. பசு மாட்டைப் போலவே உருவமுடையதாகவும் ஆனால்

கருப்பாயிருக்கும் எருமையைப்போல, இது பூனையைப்போலவே உருவம் பெற்றுகருப்பாயிருக்கிறது" என்று பல விதமான யோசனை செய்துபின் ஒருவாறு தீர்மானித்தவனாய் கைகால்களைக்கட்டியிருக்கும் பூனையைநோக்கி" ஏய்! மூஞ்சூறு மிருகமே! நீ சும்மா! குழந்தை பழுவதுபோல் கத்திவிட்டால் உன்னை நான் விடுவேன் என்று பார்த்தாயோ! அது இந்த ஜன்மத்திலில்லை.நீ என்னவோ என் கையில்அகப்பட்டு விட்டாய்! இனி உன்னைக் கொண்டே நான் பெரிய பணக்காரனாகவும் வைத்தியனாகவும் ஆய்விடுவேன். இது நிச்சயம்: உம். கத்தாதே! போடு புழுக்கை. என் தந்தையின் வலியைச் சீக்கிரம் குணப்படுத்தவேண்டும். உம் புழுக்கை போடு; போட்டாயா? இனிமேல் போடாவிட்டால் சாயாது." என்று கூறிக் கொண்டே அதை ஆட்டினான்.

அந்தப் பூனையோ, இவன் கையினின்றும் தப்பியோடுவதற்காகக் கையையும் காலையும் உதறிக்கொண்டு "மியாவ் மிய்யாவ்!" என்று கத்தியதுடன் அவன் காலையும் உடம்பையும் பிறாண்டுகின்றது. இதைக் கண்ட அந்த மதியீனன். "என்ன என்ன! அடாயப்பா! ரத்தம் வரும்படியாகப்பிறாண்டுகின்றதே! இத்துணை வீரமா இதற்கு? ஆ! இப்படி தான் குட்டி மூஞ்சூறுகளும் என் காலைக் குத்தின. சரிதான், நீ பிறாண்டினால் உன் புழுக்கையைக் கொண்டு எனது நோயைத் தீர்த்துக் கொள்வேன். இனி மேல் எனக்கு வழி தெரியாதோ என்ன! ஏன் பேசாமலிருக்கிறாய்? போடு புழுக்கை! இல்லையேல் உன்னைச் சும்மா விட மாட்டேன். உம். போடுகிறாயா? இல்லையா" என்று அதைப் பிடித்துத் தாறுமாறாக ஆட்டினான்.

ஏற்கெனவே சண்டையிட்டுக் கொண்டிருந்த பூனை இவன் செய்யும் உபத்திரவத்தைச் சகியாமல் மீண்டும் சீற்ற மடைந்து உற்ற் என்று கத்திக்கொண்டே அகங்காரத்தோடு நன்றாக அழுத்தமாகப் பிறாண்டியதுடன் பல்லாலும் கடித்து விட்டது. இந்த பாதையைத் தாங்கமாட்டாத தாஞ்சாபகதூர் "ஆ! அப்பாடா!" என்று கத்திக் கொண்டே தான் பிடித்திருந்த பிடியை

விட்டு விட்டுத் தன்னைக் கடித்துப் பூறிய விடத்தைத் தடவிக் கொண்டான். இது தான் தருணமென்று கண்ட பூனை தன் பற்களால் துணியைக் கடித்துக் கிழித்துக் கொண்டே ஒரே ஓட்டமெடுத்தது.

தன்னைக் கடித்துப் பீறியது மல்லாமல் தான் இதுகாறும் கஷ்டப்பட்டுப் பிடித்தும் தன்னை ஏமாற்றி ஓடி விடவே அவன், தனது பாதையைக் கவனியாது அந்தப் பூனை சென்ற வழியே அதைத் துரத்திக் கொண்டு ஓடினன். அப்பொழுது உதயமாகும் தறுவாயாகிக் கிழக்கு வெளுத்து விட்டதால், அவன் தன் பலங்கொண்ட மட்டும் ஓடினன். அந்த பூனை எவ்விதமோ ஓடி எங்கோ மறைந்து விட்டது. அதை விடாது துரத்திக் கொண்டே ஓடியதில் கால்களில்முட்களும் கற்களும் குத்தியதுடன் கால்கள் சோர்வுற்றுத் தேகக் களைப்பு மேலிட்டு தபீரென்று ஸ்மரணையற்று விழுந்து விட்டான்.

பின்னர் அவன் கண் திறந்து பார்க்கும் போது தான் ஒரு வீட்டுத் திண்ணையில் படுத்திருப்பதை யறிந்தான். அவனுடைய கவனம் முற்றும் மூஞ்சூறின் மீதே சென்றிருந்ததால் அவன் மெல்லஎழுந்து உட்கார்ந்து "ஆகா மூஞ்சூறு அகப்பட்டதா?" என்று கூறியவாறு சுற்று முற்றும் பார்த்தான்.

அவனெதிரில் நின்றிருந்த மனிதன் "ஏனப்பா! என்ன செய்கிறது? மயக்கம் தெளிந்ததா! ஏதோ 'மூஞ்சூறு!' என்று பிதற்றினயே! என்ன செய்தி! ஏன் அவ்வாறு கூறினை? நீ யார்? எதற்காக நடுமத்தியில் விழுந்து கிடந்தாய்?" என்ருன். அப்போதும் நமது தாஞ்சாபகதூர் மூஞ்சூறின் நினைவாகவே யிருந்ததால், இவனுக்கு இன்னது பதிற் சொல்வதென்பதே தெரியவில்லை. "உம். மூஞ்சூறு! அந்த மூஞ்சூறு மிருகம் ஓடிவிட்டதே! ஏ!" என்று பெரிய தொண்டையுடன் சத்தமிட்டவாறு "ஐயோ! அகப்பட்டும் தப்பி விட்டாயே! ஆ ஆ ஆ! தாஞ்சாபகதூரும் என்னம்மாடி! தாவிப்பிடித்தானே! ஏ ஏ! காலெல்லாம் பூறிவிட்டு ஏ மூஞ்சூறே! காணுது போய் விட்டாயே! ஹா! ஹா! இனிமேல் கிடைப்

பாயோ! மூஞ்சூறே என் மனக் கவலை தீர்ப்பாயோ!" என்று ஒப்பாரிவைத்துப் புலம்புவதைக் கண்ட எதிரில் நின்ற மனிதனுக்கு அடங்கா நகைப்புண்டாய் விட்டது. ஏற்கனவே அந்த மனிதன் முழுக்குறும்பனுதலால் இவன் அழுவதைக் கண்டு முதலில் நகைத்துப் பின்னுல் அந்தப் பையனைச் சற்று வேடிக்கை செய்ய வெண்ணித் தானும் பெரிதாக அழத் தொடங்கி, "ஐயையோ! அம்மாடீ! மூஞ்சூறே! போனையா! வந்தாயா! இருந்தாயா! செத்தாயா!" என்று கூறிக் கொண்டே தாஞ்சா பகதூரைக் கட்டிக் கொண்டு அவனைப் பிடித்து ஆட்டிப் புலம்பிப் பிறகு சற்றுத் தெளிந்தவன் போல நடித்து!' "அப்பா! குழந்தாய்! என்ன ஆபத்துத் தான் நேர்ந்து விட்டதடா! விவரித்துக் கூறடா!" என்று மெல்லக் கேட்டான்.

இதைக் கேட்ட தாஞ்சாபகதூர் அப்போதும் புலம்பியவாறு "என் தந்தையின் பொருட்டாக நான் மூஞ்சூறு மிருகத்தைப் பிடித்தும் அது ஓடிவிட்டது. இனி மேல் என்ன செய்வேன்? அந்த மிருகம் எப்படி என்னைக் கடித்து விட்டது பாருங்கள்?" என்று அப் பூனை கடித்துப் பிறுண்டியதை யெல்லாம் காட்டி "ஏனையா! இனி அம்மூஞ்சூறு மிருகம் எங்கு கிடைக்கும்? அதைத் தயவு செய்து சற்றுக் கூறுங்களேன். உமக்குப் புண்ணியமுண்டு" என்று கெஞ்சியவாறு அவன் காலில் விழுந்தான்.

அங்கிருந்த குறும்பன் நகைத்தபடியே அவனைத் தூக்கி நிறுத்தினன். அவன்நமது தாஞ்சாபகதூரின் முழு மூடமதியை நன்ருகத் தெரிந்து கொண்டான். ஆதலால் "இவனிடம் பின்னும் சற்று வேடிக்கை செய்து நமது வீட்டுச் சாமான்களை யெல்லாம் ஒழித்துக் காலி செய்து கட்டி வண்டியிலேற்றி விட இவன் தகுந்த துணை தான். இவனைக் கொண்டே வேலையை முடித்து விடுவோம்" என்று தீர்மானித்தவனுய் தாஞ்சாபகதூரை நோக்கி "அப்பா! தம்பீ! ஆகா இப்போது தான் எனக்கு நன்ருகத் தெரிந்துவிட்டது. ஐயோ! அந்த மூஞ்சூறு மிருகம் சாமானியமான தன்றே! அதைப் பிடிப்பதற்காக யான் பட்ட கஷ்டம் எனக்குத் தான் தெரியும். அதாவது எனது எள்ளு பாட்டனுராகிய பெருச்சாளியப்பனுக்கு பல்வலி

வந்து மெத்த கஷ்டப்பட்டார். அதற்காக அவரை யான் பன்றி தேவரிடம் அழைத்துச் சென்று காட்டினேன். பன்னிதேவனர் பெருச்சாளியாரை நன்ருகப் பரீக்ஷித்து விட்டு வெகு நேரம் யோசித்துப் பின்னர், "ஆகா! இந்தப் பெரிச்சாளியப்பனுடைய பல்வலிக்கு மருந்தே கிடைக்கவில்லே. அதற்கு ஒரே ஒரு முறையிருக்கின்றது; அந்த விதம் செய்தால் உடனே குணமாய்விடும். அதாவது தினந்தோறும் இராக்காலத்தில் வீட்டிலுள்ள சுவர்கள், கதவுகள், திண்ணைகள், அடுப்புகள் முதலிய எல்லாவற்றையும் இவர் பற்களால் கடித்துக் குவித்துவிட்டால் உடனே பல்வலி குணமாய்விடும்" என்ருர்.

பிறகு அதன்படியே என் பாட்டனுகிய பெருச்சாளியப்பன் வீடுமுழுதும் அறுத்துக் குவித்தார். அதோடு நிற்காது அண்டை வீடு, அயல்வீடு, முதலியவீடுகளுக்கும் சென்று அறுத்துத்தள்ளினுர். அவ்விதம் செய்ததில் பல்வலிமுற்றும் குணமாய்விட்டது. பின்னர் பல்லிருந்தாலல்லவோ வலியுண்டாகும். பல்லும்போய் விட்டது. அவருக்கோ முறுக்கு சீடைமுதலிய பக்ஷணங்கள் சாப்பிட அதிகஆசை. அதைத்தின்பதற்கோ பல் கிடையாது. ஆதலால் பல் முளேக்க என்ன வழிசெய்யலாம் என்று யோசித்து ஒருபிரபல வைத்தியராகிய குள்ளநரி வள்ளலிடம் அழைத்துச்சென்றேன். அந்தவைத்தியர் வாயை நன்ருகப் பரிசோதனை செய்து பின்னர், "ஐயா! இதற்கு என்கைவசம் அவுஷதமே இல்லே. ஓர் அபூர்வமான மருந்து கூறுகிறேன்; அதைப்போட்டால் பல்வளர்ந்துவிடும். அதாவது, மூஞ்சூறு என்ளுெரு பெரியமிருக மிருக்கிறது; அதைப்புழுக்கையிடச் செய்து அதைத் தேய்த்துப் பற்கள் விழுந்தவிடத்திற்போட்டால் உடனே பல் முளேத்துவிடும். இதுதான் மருந்து" என்ருர். உடனே அந்தமூஞ்சூறு மிருகத்தை வெகு பாடுபட்டுப் பிடித்துவந்தேன் அதைப் புழுக்கையிடச்செய்தேன். அதுவும் உன்னேச்செய்ததுபோலவே என்னேயும் கடித்துப் பிறுண்டியது. நான் அதைச் சங்கிலியில் பிணேத்துவிட்டதால் அதனுல் ஓட முடியவில்லே. அது புழுக்கையிட்டது. அப்பாடா! அந்தப் புழுக்கையானது பெரிய மலேகளின் குஞ்சுகள் போல இருந்தன.

அதை உறைத்து ஒருதரம் போட்டேன். பல் நன்ருகக் கிளம்பி விட்டது. மறுதரம் போட்டேன். பல் வாயைத் தாண்டிக்கொண்டு வெளியே கிளம்பிவிட்டது! அதற்குமேலும் போட்டால் பல் அதிக மாக வளர்ந்து யானையின் தந்தத்தைப் போல நீண்டுவிட்டால் அதைத் தந்தம் முளைத்துவிட்டதென்று யாரேனும் பெருச்சாளியப் பனைக் கொன்றுவிடப் போகிருர்களே என்கிற பய முதித்து விட்டது. அதன்மேல் அதைப் போடாது ஜாக்ரதையாய் வைத்து விட்டேன்'' என்று இவன் பேசி முடிக்குமுன் நமது தாஞ்சா பகதூர் வெகுவாய் துள்ளிக் குதித்து "ஆகா! இப்போது அந்த மூஞ்சூறின் புழுக்கை தம்மிடம் இருக்கின்றதா? அதைத் தயவு செய்து எனக் களிக்க முடியுமா?'' என்று மீண்டும் அவனை வணங்கி எழுந்து கேட்டான்.

இதைக் கேட்ட குறும்பன் "ஆகா! என்ன ஆத்திரம் தம்பி உனக்கு! நான் சொல்வதற்குள் நீ அவசரப்படுகிருயே! உனது தந்தையின்மீது நீ கொண்டுள்ள பக்தியையும், மூஞ்சூறு மிருகத் தைச் சிறியவனுகிய நீ பிடிக்கக் கிளம்பியுள்ள உனது சாமர்த்தியத் தையும் கண்டு மகிழ்ந்த நான் உனக்கந்த மூஞ்சூறு புழுக்கையைக் கொடுத்து உதவி புரியவேண்டும் என்கிற எண்ணங்கொண்டேன். அதனுலேதான் உன்னிடம் இப்போது அதைப் பற்றிக் கூறினேன். தெரியுமா? அந்தப் புழுக்கையை நான் ஜாக்கிரதையாகத் தான் வைத்திருக்கிறேன். ஆனுல் அதை எந்த இடத்தில் வைத்தேன் என்பது நினைவிற்கு வரவில்லை. யான் இன்று வீட்டுச் சாமான் களைக் காலி செய்துகொண்டு ஊருக்குப் போகப் போகிறேன்; ஆதலால் இவ் வீடு முற்றும் நீயே தேடிப் பார்த்துக்கொள். யான் கூடப் பார்த்து உனக்கதை எடுத்துத் தருகிறேன்'' என்று தந்திர மாகக் கூறினுன். இதைக் கேட்ட தாஞ்சாபகதூர் மூஞ்சூறு புழுக்கை அகப்படும் என்கிற பெருமையால் துள்ளிக் குதித் தெழுந்து அவனுடன் சாமான்களை ஒழித்துத் தேடத் தொடங்கினுன்.

இந்த குறும்பன் அந்தப் பையனைக் கூட வைத்துக்கொண்டு எல்லாச் சாமான்களையும் ஒழித்துக் கட்டி அவைகளை வண்டியிலும்

ஏற்றிவிட்டான். அந்தக் குறும்பன் தாஞ்சாபகதூரின் மூடத் தனத்தை எண்ணி நகைப்பும், வருத்தமும் கொண்டான். "ஐயோ! பாவம்! உலகமே இவ்விதம் தானிருக்கிறது! இந்தப் பயல் மூடாத்மா என்பதை யறிந்து நாம் இவனுக்கு ஓர் பலனு மில்லாது நமது வேலையை முடித்துக்கொள்கிறோமே! குறும்புக்குச் செய்தாலும் இது பாப மல்லவா! சிச்சி! அறிவு வளருவதற்கான கல்வி யை;இவனுக்குப்பயில்விக்காது கேவலம் மூடமாகவே இவன் தாய் தந்தையர் வளர்த்து விட்டார்கள். அதன் பயன் இது! பாவம் இவனுக்கு நாம் வயிற்றிற்கேனும் ஆகாரம் அளித்து அனுப்புவோம்" என்று தனக்குள்ளாக எண்ணியவாறு தன் வேலை முழுவதும் முடிந்த பின்னர் எங்கிருந்தோ தேடி எடுத்ததுபோல் ஓர் சிறிய குழவிக் கல்லை எடுத்துக்கொண்டு வந்து "ஆ! இதோ மூஞ்சூறின் புழுக்கை கிடைத்துவிட்டது. உனது அதிர்ஷ்டமே அதிர்ஷ்டம்! இந்தா இதை ஜாக்ரதையாக வைத்துக் கொள். உனக்கு உணவளிக்கின்றேன், போஜனம் செய்துவிட்டுப் போகலாம் வா!" என்று அழைத்தான்.

ஆகா! தனக்கு மூஞ்சூறின் புழுக்கை கிடைத்துவிட்டதை எண்ணி மட்டற்ற மகிழ்ச்சி யடைந்தவாறு அந்தக் குறும்பனை விழுந்து விழுந்து வணங்கித் தோத்திரம் செய்து அந்தக் கல்லைத் தன் மடியில் வைத்துக் கொண்டான். பின்னர் குறும்பனிட்ட உணவை அருந்திவிட்டு அவனிடம் விடை பெற்றுக்கொண்டு அபாரமான சந்தோஷத்தினால் முக நகையுடன் கிளம்பினன்; சிறிது தூரம் வந்தான். அவனுக்குத் தன் ஊருக்குப் போவதற்கு வழி மறந்துவிட்டது. அவன் வழிதப்பி வெகுதூரம் வந்துவிட்டதால் எந்த வழியாகத் தன் ஊருக்குச் செல்வதென்பதை அறியாமல் போய்க்கொண்டே யிருந்தான்.

அத்தருணம் அவ்வழியாக ஓர் கிழவன் தலைமீது ஒரு மூட்டையும் தோள்மீது ஒரு மூட்டையுமாகச் சுமந்து தள்ளாடியவாறு வருவதைக்கண்ட தாஞ்சாபகதூர் அவனெதிரே சென்று, "ஐயா! பெரியவரே! வீட்டுப்புத்தூருக்குப் போகும் வழியைச் சற்றுக் காட்டிவிடும்" என்று வணங்கிக் கேட்டான்

இது கேட்ட கிழவன், "ஏனடா! நீயோ சிறு பிள்ளையாயிருக்கிறே! எப்படி வழி தப்பித் தனியாக வந்துவிட்டாய்?" என்று கேட்டான். இதுகேட்ட நமது தாஞ்சாபகதூர் தான் புறப்பட்டது முதல் இது வரையில் நடந்தவைகளை யெல்லாம் கூறி "ஐயா! சீக்கிரம் எனக்கு வழி காட்டவேண்டும்" என்றான்.

இவனுடைய மூடத்தன்மையையும் இப்பைத்தியத்தை ஒருவன் ஏமாற்றி வேலை வாங்கிக்கொண்டு கல்லைக் கொடுத்து அனுப்பி விட்டதையும் கிழவன் தெரிந்துகொண்டபடியால் அவன் "நான் கொண்டுவந்த பளுவான இம் மூட்டையை இவன் தலையில் வைத்து எடுத்துச் செல்லலாம். இவன் மதியீனனானதலால் சுமப்பான்!" என்று தீர்மானித்தவனாய் நகைத்துக்கொண்டே, தன் மூட்டைகளைக் கீழே இறக்கிவிட்டு உட்கார்ந்தபடியே பேசத் தொடங்கி, "அப்பா! நீ நல்ல சாமர்த்தியசாலியடா சிறிய பையனாகிய நீ எவ்விதமோ அந்த மூஞ்சூறு மிருகத்தைப் பிடித்துவிட்டாயே! உன் வீர சூரத்தை யாரே அறிவார்? அந்த மூஞ்சூறு மிருகத்தைக் கண்டால் யானை கூடப் பயந்து ஓடி ஒளித்துக்கொள்ளும்! அந்த மூஞ்சூறு அத்தனை கொடியதாம். ஐயோ! அதையேன் கேட்கிறாய்? நானும் பத்து தினமாக அலைந்து இப்போதுதான் அம் மூஞ்சூறு புழுக்கையைச் சேகரித்துக்கொண்டு வருகிறேன். எதற்காகவெனில், எனது பெண்ஜாதியினுடைய புருஷனுக்குத் தலைமீது மூலைச்சூடு கிளம்பி அது முதுகில் நீலச் சூடாக மாறி, பிறகு வேலைக் கிடையில் காலைச் சூடாயும் மாலைச் சூடாயும் மாறி விட்டது. அதனால் படாத இம்சையெல்லாம் படுகிறான். அதைக் கண்ட சிலர் கோழிபுரம் சென்று குரங்கு வைத்தியனாரிடம் காட்டச் சொன்னார்கள். பிறகு அப்படியே காட்டியதில் அந்த குரங்குவைத்தியனார் 'மூஞ்சூறு புழுக்கையை அறைத்துப் போட்டால் வியாதி நீங்கி விடும்' மென்றார். அதன்மேல் நான் புறப்பட்டேன். பாவிபெத்த முண்டச்சியாகிய என் பெண்ஜாதியின் புருஷனுக்காக நான் படாத பாடெல்லாம் பட்டு, அலையாத விட மெல்லாம் அலைந்து, தேடாத இடமெல்லாம் தேடிப் புழுக்கையை சம்பாதித்துக்கொண்டு 'தலையிலெழுத்தே தலையின் கீழ் கழுத்தே'

என்று தூக்கிக்கொண்டு வருகிறேன். இந்தப் புழுக்கை என்ன பளுவு தெரியுமா! கழுத்தை இறுத்துகின்றது! நானோ ஏழை; கூலிவைக்கவும் கூடவில்லை. என்ன செய்வேன் தம்பி?'' என்று பெருத்ததோர் வெடியை விட்டான்.

இந்த வரலாற்றை நமது தாஞ்சாபகதூர் உண்மை என்றே நம்பி "ஐயா பெரியவரே! தாங்கள் வருத்தப் படவேண்டாம். இந்த மூட்டையை யானாவது தூக்கி வருகிறேன். என் ஊருக்கு வழி காட்டும், நான் சீக்கிரம் சென்று என் தந்தைக்கு இதைப் போடவேண்டும். சற்று தயை புரியவேண்டும்'' என்றான். தான் எவ்விதமாயும் ஊர் போய்ச் சேர்ந்து தனது புகழையும் கீர்த்தி யையும் எல்லோருக்குங்காட்டித் தந்தையின் பிணியைத் தீர்த்த தன யன் என்கிற பட்டம் பெறவேண்டும் என்கிற எண்ணமுடைய வனாகவே இருந்ததால் அவன் மூட்டையைத் தூக்கவும் இசைந்தான்.

இதைக்கேட்ட கிழவன் 'ஐயோ பாவம்! இந்தப் பாழும் புழுக்கையை என்னாலேயே தூக்க முடியவில்லை, உன்னாலாகுமா? நீயோ சிறிய பாலகன்'' என்றான். இது கேட்ட பையன், "தாத்தா! பாதகமில்லை. மூட்டையை என் தலையில் வையுங்கள்'' என்றான். பின்னர் கிழவன் ஒரு மூட்டையைப் பையன் தலையில் வைத்து விட்டு ஒன்றை மட்டும் தானே எடுத்துக் கொண்டு பையனுடன் வார்த்தை கொடுத்துக்கொண்டே நடந்தான். மூட்டையில் அரிசி பருப்பு புளி முதலிய கனமான சாமான்களிருப்பதால் அது பைய னுடைய கழுத்தும் முதுகும் வளையும்படி அழுத்துகின்றது. எனினும் எவ்விதமான கஷ்டப்பட்டாலும் தன் ஊர் போய்ச் சேர வேண்டும் என்ற உறுதி கொண்டிருந்தபடியால், பளுவை இலட் சியஞ் செய்யாமல் அவன் நடந்தான். அவன் வெகு தூரம் சென்ற தும் கிழவனுடைய கிராமம் வந்துவிட்டது. ஆதலால் அவன் பையனிட மிருந்து மூட்டையை இறக்கி வாங்கிக்கொண்டு "அப்பா! தம்பி! இதுதான் என்வீடு. அதோ தெரிகிற ஆலமரத்தின் பக்கம் சென்றால் அங்கு ஆலங்கிளை செல்லும் பக்கத்தில் ஓர் கிளை

வழிபோகும். அவ்வழியே சென்றால் உன் முதுகிற்கு நேர் ஓர் பெரியவழி பிரியும். அந்த வழியோடு சென்றால் பெருத்ததென்னந்தோப்பு இருக்கிறது பார். அதைக் கடந்துவிட்டால் உன் ஊராகிய வீட்டுப்புத்தூர் தான். அதற்குமேல் உனக்குத் தெரியாதா! போய்வா தம்பி!'' என்று வெகு லகுவான வழி கூறிவிட்டான். இவற்றை நிரம்பவும் நிஜமென்று நம்பிய தாஞ்சாபகதூர் மூஞ்சூறு புழுக்கையுடன் கிழவனிடம் விடைபெற்றுக்கெண்டு நடந்தான்; கிழவன் கை காட்டியபக்கமே சென்றான். வெகு தூரம் சென்றபின்னர் ஆலமரம் தென்பட்டது. அப்போது வெயில் அதிகரித்துவிட்டதால் உஷ்ணம் தாங்கமாட்டாமல் அவன் கால்கள் தத்தளித்தன. அதனால் அவன் அம்மரத்தடியில் 'அப்பாடா!''என்று உட்கார்ந்துவிட்டான்.

அவனுடைய மனமோ சீக்கிரம் தன் ஊருக்குப் போய்ச்சேருவதற்குப் பறக்கின்றது, காலோநிலத்தின் மேல் வைக்கக்கூடவில்லை. பசியும் ஒருபுறம் வாட்டத்தொடங்கிவிட்டது; அப்பால் அவன் களைத்துப்போய் அப்படியே படுத்துக்கொண்டான். படுத்தவுடன் நன்றாக அயர்ந்து நித்திரை செய்துவிட்டான். பின் அவன் கண் விழித்துப் பார்க்குங்காலை சாயங்காலமாய் விட்டது. உடனே பையன் அலறி யெழுந்து ''ஐயோ! களைப்பு மேலீட்டால் நன்றாக அயர்ந்து நித்திரைசெய்து விட்டோமே! பொழுது சாயங்காலமாய் விட்டதே! நாம் இனி எவ்விதம் நமது ஊரை அடைவது? இன்னும் பொழுது செல்லச்செல்ல இருளல்லவோ சூழ்ந்துகொள்ளும்? என்னசெய்வது?'' என்று புலம்பிக் கொண்டே வழிதெரியாது நடந்து சென்றுகொண்டே இருந்தான். நன்றாக இருள்நிரம்பி விட்டது;பையனுக்கு பயமோ அதிகரித்துவிட்டது. எங்கு பார்த்தாலும் பயங்கரமான இருள் சூழ்ந்து கொண்டிருக்கும் காட்சி இவனை முற்றிலும் கலக்கி விட்டது. முதல் நாளிரவில் மூஞ்சூறைத் தேடிக் கொண்டே சென்றதால் பயம் தோன்றவில்லை. இப்பொழுது அடவி மத்தியில் இருட்டில் அகப்பட்டுக் கொண்டதால் பயம் அவனுக்குப் பெரு நடுக்கத்தைக் கொடுத்தது. அந்த நள்ளிருளிலும் பையன் சிறிது தூரம் தட்டித் தினறி நடந்தான். அதற்கு மேல்

அவனால் நடக்க நிதானம் தெரியாமையால் ஓர் மரத்தடியில் படுத்து விட்டான். வெகு நடுக்கத்துடனேயே அவன் அன்றிரவைக் கழித்தான்.

உதயமானதும் மீண்டும் பையன் எழுந்து தாறுமாறாகக் கால் இழுத்துச் சென்ற இடத்திலெல்லாம் நடந்து கொண்டே இருந்தான். அப்போது ஓர் சாத்வீககுணமுடைய மனிதன் அவ்வழியே வந்தார். அவரைக் கண்ட நமது தாஞ்சாபகதூர் எதிர் சென்று காலில் விழுந்து நமஸ்கரித்துத் தான் மூஞ்சூறு பிடிக்க வந்தது முதல் அப்போது அவரைக் கண்டது வரையிலுள்ள சகல வரலாற்றையும் அவர் கேளாமுன்னரே உரைத்துத் தன் ஊரையடைய வழி காட்டும்படி வேண்டிக் கொண்டான்.

இதைக் கேட்ட அந்த மனிதருக்கு உண்மையிலேயே இந்தப் பையனிடத்தில் அனுதாபம் உண்டாய்விட்டது. அவனுடைய அறியாமையினால் அவன் மூட எண்ணங்கொண்டு மூஞ்சூறு பிடித்த செய்தியைக் கேள்வியுற்ற ஏனையோரும் ஏமாற்றி இருக்கிறார்கள் என்பதை யறிந்து கொண்டார். அவ்வாறு அறிந்தவர் பையனை நோக்கி "அப்பா! இப்படி உட்காரு; உனக்கு சில சங்கதிகளைத் தெரிவிக்கின்றேன் கேள். தம்பி! சுத்த குப்பைக் காட்டில் பிறந்துள்ள உன்னை உன் பெற்றோர்கள் குப்பையைப் போலவே மதித்துச் சிறிதும் நீ உய்யும் வழியைத் தேடாமல் வளர்த்து விட்டதன் பயன் இவ்விதம் அலைய நேர்ந்தது. மாதா பிதாக்கள் மக்களைக் கவனியாது விட்டு விட்டால் மக்கள் நலனை அடைவது எவ்விதம்? மாதாவானவள் மக்களுக்குப் பாலூட்டித்தாலாட்டிவளர்ப்பதே போல பிதாவானவன் மக்களுக்குக் கலையூட்டி அறிவை யூட்டி வளர்க்கக் கடமைப்பட்டவன். அந்தக் கடமைகளைச் சில பிதாக்கள் கவனியாமல் பிள்ளைகளை இவ்விதம் பாழாக்கித் திரிய வைத்து விடுவதை யான் பல இடங்களிலும் பார்த்து வந்திருக்கிறேன்; அவர்களில் உன்னையும் ஒருவனாகக் கண்டேன். நீ கேவலம் அறியாமையாலும் மந்த மதியினாலும் மூஞ்சூறை யோர் பொருட்டாக எண்ணி வெளிப் போந்தாய். உன்னுடைய செய்கையைக் கேட்டே

உன்னை அவ்விருவரும் காரியார்த்தமாக ஏமாற்றி விட்டார்கள். மூஞ்சோறுவது, மிருகமாவது? மூஞ்சூறு என்பது ;எலி ஜாதிகளில் ஒன்றாகிய சிறிய எலியல்லவோ! இதைக் கூட உனக்கறிவிக்காத உன் பெற்றோரும் ஒரு மனிதராவார்களா! நீ கையில் வைத்திருப்பது ஓர் கல்லென்பதை இனியேனும் தெரிந்து கொள். வீட்டுச் சாமான்களை, உன்னை உபகாரத்திற்கு வைத்துக் கொண்டு காவி செய்வதற்காக அந்த மனிதன் இவ்விதம் செய்தான். பளுவாகிய மூட்டையைச் சுமக்க மாட்டாமல் அதை உன் தலையில் வைப்பதற்கு அந்த மனிதன் அவ்விதம் கூறினான். இந்தக் கபட நாடகத்தைச் சிறிது மறியாத நீ கேவலம் இப் பாலிய வயதில் இக் கானகத்தில் வந்து அகப்பட்டுக் கொண்டு தவிக்கின்றாயே? அப்பா! உன்னுடைய புகழும் கீர்த்தியும் ஓங்குவதற்கு மூஞ்சூறு புழுக்கை தான் ஆதாரமாகத் தோன்றிற்று! அடாடா என்ன பேதைமை தம்பி! உன்னுடைய தகப்பனாரின் நோயைத் தீர்ப்பதும், பின்னும் அந்த புழுக்கையைக் கொண்டே பெரிய புகழுடையவனாவதும், தனவந்தனாவதும், மருத்துவனாவதும் கூடுமென்று கொண்ட மூட நம்பிக்கையை இப்போதே விட்டு ஒழி. உன் கையிலிருக்கும் கல்லை விட்டு எறி. நல்லவிவேகியாயும் கீர்த்திமானாயும் மாதா பிதாக்களை மகிழ்விக்க வேண்டியவனாயும் ஆக எண்ணினால் இம் மூஞ்சூறு உனக்கு ஒரு சிறிதும் சாதகமாகாது. என்ன செய்தால் நீ கீர்த்தியுடன் உன்னைப் பெற்றோரைக் காணலாம் என்றால், கேள். உத்தமனான ஒரு சற்குருவை அடைந்து சீடனாக விருந்து, பலகலைகளைக் கற்று, நன்றாகப் படித்து, பாண்டித்யம் பெற்றுச் சற்குணவானாயானால் உன்னை உன் தாய் தந்தையரே யன்றி எல்லோரும் புகழ்வர். மற்ற வழியில் நீ நன்மை எய்த முடியாது. தம்பி! நான் நாட்டில் வசிப்பவனன்று; கானகத்தில் திரிந்து கந்த மூலங்களைப் புசித்து கருணாகரனை கணமும் மறவாது பஜனை செய்து கொண்டு திரிகின்றவனாதலால் நீ கேட்ட ஊரையானறிய மாட்டேன். நீ என்னுடன் கூட வருவதற்கும் உனக்கு இன்னும் பக்குவம் சிறிதுமில்லை. ஆதலால் உன்னையானழைத்துச் செல்வது சாத்யமன்று. நீ சதா உன் வாயினால் "கருணையங்கடலே காத்தருளவேண்டும்" என்கிற வாக்கியத்தை உச்சரித்துக் கொண்டே உன் மனம் போனவாறு சென்று

ஓர் மகானை அடைந்து அவருடைய சீடனாக விருந்து நல்ல அறிவைப் பெற்றுப் பின்னர் புகழுடன் உன் பெற்றோரைக் காண்பாய் அப்பால் உன்மனக் கோரிக்கையும் ஈடேறியதாகும். ஆதலால் நீ இனி யாரையும் நம்பாதே. நீ குருவாகக் கொண்டவரிடம் பய பக்தியுடன் அவர் சொற்படி நடந்துகொண்டு உனது அறிவை வளர்க்கும் வழியைத் தேடிக்கொள். அங்ஙனம் தேடும் புகழே கடவுளுக்கும் வெகு திருப்தியானதாக விளங்கும் நான் செல்கிறேன். யான் கூறிய வனைத்தும் உன் மனத்தில் பட்டனவா!'' என்று வெகு கனிகரத்துடன் கேட்டார்.

இந்த விஷயங்கள் நிறைந்த வார்த்தைகளை அவன் ஜன்மாவில் இதுபரியந்தம் கேட்டிலேயாதலால் இவைகளெல்லாம் அவனுக்கு வெகு புதிதாகத் தோன்றின. அதற்குப் பதில் கூறவும் தெரியாது சற்று விழித்துப் பின்னர் பேசத் தொடங்கி ''ஐயா! பெரியவரே! நான் இத்துணை அரும்பாடு பட்டுச் சம்பாதித்து வந்த இது மூஞ்சூறு புழுக்கையல்லவா! வெறுங் கல் தானு! அந்த மனிதர்கள் என்னை ஏமாற்றிவிட்டார்களா! ஆனல் இந்தக் கல் உபயோக மில்லையா! இதைப் போட்டுவிடட்டுமா! போட்டுவிட்டால் அப்புறம் மூஞ்சூறு புழுக்கையை நீங்கள் தேடித் தருகிறீர்களா! அப்படியில்லா விட்டால் யாரிடமோ போகச்சொல்கிறீர்களே அவர்கள் மனுஷ்யரா! மூஞ்சூறு போல மிருகமா! அவர் என்ன செய்வார்? அங்கு மூஞ்சூறின் புழுக்கை கிடைக்குமா!'' என்று மீண்டும் மூடத்தனமாகவே கேட்டான்.

இதுகேட்ட அந்த மனிதன் இவனுடைய மதியீனத்தை எண்ணி வருந்தியவாறு ''இவனுக்கு நாம் எவ்விதம் சொன்னல் தெரிந்துகொள்வான்? மூர்க்கனும் முதலையும் கொண்டது விடா என்றபடி இந்த மூடன் தன் மனத்தில் கொண்ட விஷயத்தை விட வில்லையே! இவனுக்கு ஏதேனும் ஓர் உபாய வழியில் விஷயத்தை யறிவித்து அறிவு பெறச் செய்து கடவுளை யறியச் செய்ய வேண்டும்'' என்று எண்ணியவராய் அவனை நோக்கி ''அப்பா! தம்பி! அந்த மூஞ்சூறின் புழுக்கையை நீ இன்னும் விட்டாயில்லை.

ஐயோ! நீ இந்த அறியாமைக் கடலினின்றும் எழுந்திருக்கும் வகையை அறியாய் போலிருக்கிறதே! உம். தம்பீ! நீ ஒன்றுசெய். அதாவது, மூஞ்சூறுக்கு பாஞ்சாலி ரக்ஷகா! என்று ஓர் பெயருண்டு. அந்தப் பெயரை சதா சொல்லிக்கொண்டே சென்றால் அம் மூஞ்சூறும் கிடைக்கும். அதோடு நில்லாமல் ஓர் குருவை யடைந்து கல்வி கற்றுக்கொண்டு கீர்த்திமானாயும் வாழ்வாய்!'' என்று கூறி விட்டுப் போய்விட்டார்.

இதைக் கேட்ட பையனுக்கு விஷயங்கள் சரியானபடி மூளையில் எட்டாமல் பெரும் குழப்பத்தை யுண்டாக்கிவிட்டது. எனினும் மூஞ்சூறை மட்டும் மறந்தானில்லை. அதன் மேலவன் அவ்விடத்தைவிட்டுப் போக யத்தனித்தான். திடீரென்று எதையோ எண்ணியவனாய் முன் சென்ற பெரியாரைக் கூவி அழைத்து "ஐயா! முதலில் ஏதோ சொன்னீர்கள். பின்னால் பெருச்சாளியோ, ஏதோ சொன்னீர்கள். இரண்டும் மறந்து விட்டன. மறுபடியும் சொன்னால் மெத்தப் புண்ணியம்'' என்று கூறி வணங்கினான்.

நகைத்தபடியே அப்பெரியார் "ஐயோ! இவனுக்கு யான் என்ன விதமாகக் கூறினால் மனத்தில் படும்?'' என்று சற்று யோசித்தார். பின்னர் ஓர் தீர்மானத்திற்கு வந்து அவனை நோக்கி "தம்பீ! காக்காய் என்றால் மூஞ்சூறுக்கு மிகவும் ப்ரீதி. ஆகையால் நீ என்ன செய்கிறாய் தெரியுமா! "காக்காயா! அரி அரி!'' (அரி: அறிந்துவைகாக்காயா அரி அரி என்னைக் காக்கமாட்டாயா அரியே! என்ற கருத்துடன்; காக்காயா! அரி, அரி! என்று கூறினார்) என்றால் மூஞ்சூறு ஓடிவரும். இந்தக் காக்காயா! அரி அரி! என்ற பதங்களை சொல்லிக்கொண்டே போ!'' என்று கூறிவிட்டுப் போய்விட்டார்.

பிறகு பையன் அந்த வாக்கியத்தை மறவாது "காக்காயா அரிஅரி! மூஞ்சூறு! பிடி'' பிடி! என்று கூடச் சேர்த்துச் சொல்லிக் கொண்டே வெகு தூரம் சென்றான். அங்கு பூரண கர்ப்பமாயுள்ள ஓர் குதிரை படுத்துக்கொண்டே புரண்டுகொண்டிருந்தது. அதைக் கண்டதும் பையன் அதனருகில் சென்று பார்த்தான்.

“இதென்ன நமது ஊர் வண்ணானிடம் இருக்கும் கழுதையைப்போல இருக்கிறதே! இது கழுதைதானா!” என்று உற்றுக் கவனித்தான். ஓகோ! இதன் வயிறு பெரியதாக விருக்கிறது. அந்தக் கழுதைக்கு வயிறு சிறியதாகவன்றோ இருந்தது. ஆகையால் இது கழுதை யல்ல. பூனையைப் போல மூஞ்சூறு மிருகம் இருப்பது போலும் பசுவைப் போல எருமை இருப்பது போலவும் கழுதையைப் போல இது ஏதோ தெரியவில்லை. ஒருக்கால் அந்தப் பெரியவர் ஓர் குருவிடம் சென்று ஏதோ செய்யச் சொன்னாரே! அந்தக் குரு இவராகத் தானிருப்பரோ? இருக்கலாம். அவரிடம் கலை நிறைய விருக்கு மென்று கூறினாரே! அந்தக் கலையை வயிற்றில் நிரப்பி இருக்கிறார்போல் இருக்கிறது. அதனாலேதான் வயிறு பெருத்து விட்டது. சரி நாம் இவரிடமே இருந்து கலை என்று ஏதோ சொன்னாரே அதைக் கற்றுக்கொண்டு பின்னர் நாம் நமது ஊருக்குப் போவோம்’ என்று தீர்மானித்துக்கொண்டு “ஏ மகானே! குரு குரு குரு குரு குரு மகானே! காக்காயா! அரி அரி அரி! உம்மிடம் ஏதோ கலையிருக்கிறதாமே, அதில் எனக்குச் சிறிது அளிக்கவேண்டும். உமக்குப் புண்ணியமுண்டு” என்று கூறிக் கொண்டே அதன் காலைப் பிடித்துக்கொண்டே தடா ரென்று கீழேவிழுந்தான்.

இவன் தன்காலைப் பிடித்த ஆத்திரத்தினால் அந்தக்குதிரை சடக்கென்று எழுந்து காலால் எட்டி ஓர் உதையளித்தது. இந்த உதையுடன் நமது மூடாத்மா ஓவென்று அலறிக்கொண்டே சிறிது தூரத்தில் விழுந்து “ஐயோ! கலை என்னும் பொருள் ஆரம்பத்திலே யே இத்தனை கஷ்டமாக விருக்கின்றதே! இதென்ன சங்கடம்பிடித்த கலை, கலையாம். தலையாம், கால்வதையாம், அப்பாடா! முதுகு கிழிந்துவிடும் போலாயிற்றே!’ என்று வருந்தியவாறு எழுந்து “ஐயோ! காக்காயா! அரி அரி!” என்று கூறியவாறு மீண்டும் குதிரையின் அருகில்சென்று அதன்வயிற்றை மெல்லத் தடவினான். அப்போது குதிரையின் வயிற்றில் தினவு எடுத்ததால் தன்னை யவன் தடவிச் சொரிவதாக எண்ணி வாளாவிருந்தது. குதிரையின் வயிற்றை இவன் தடவியபோது வயிற்றிலுள்ள குட்டி முட்டி

மோதியது இவன் கையில் தென்பட்டது. இதைக்கண்ட இவன் ஆச்சரிய மயமாக மாறிப்போய், "ஆகா! கலே வயிற்றில் ஆடுகின்றதே! கலே பெரிய கலேயாகவே இருக்கும்போல தோன்றுகின்றதே! பேஷ்! பேஷ்! நாம் இந்த குருவிடம் கலேயைப் பழகினல் நமது வயிற்றிலும் இவ்விதம் கலேயாடும். அப்போது நம்மையும் இவ்விதம் யாரேனும் தடவினுல் அவர்களே நாமும் எட்டி ஒரு உதை கொடுப்போம். அவர்களும் நாம் விழுந்ததுபோல விழுவார்கள். அதன்மேல் நம்மிடமே அவர்கள் கலே கற்க வருவார்கள். நாம் பெரிய கலே கலேயாக மாறிவிடலாம். இந்தக் கலே புகழுடன் ஊருக்குச்சென்ருல் எல்லோரும் சித்தம் களிப்பார்கள்" என்று மனக் கோட்டை கட்டியவாறு அக்குதிரையின் வயிற்றை விடாது தடவினுன்.

இவன் தடவுவதால் அதற்கு இம்சை உண்டாகி ஓடவாரம்பித்தது. அதைக்கண்டவுடன் தானும் கூடவே பின்னுல் ஓடியவாறு குரு குரு குரு. இரு இரு இரு. நானும் வருகிறேன். உம்மைத் தொட்டமாத்திரத்திலேயே என் வயிற்றிலும் ஏதோ ஆடுவதுபோல இருக்கிறது. சற்று இரும் இரும்" என்று கத்திக்கொண்டே ஓடினுன். அக்குதிரை அருகிலுள்ள ஓர் கிராமவாசியினுடைய தாகையாலும் அது மேய்ச்சலுக்காக அவ்விடம் வந்த தாகையாலும் இவன் செய்கையைக் கண்டு பயந்து ஓட்டமாக ஓடித் தன்னிருப்பிடத்தை யடைந்துவிட்டது. அந்தக் குதிரையின் வேகத்திற்குச் சரியாக இவனுல் ஓடமுடியாமல் பின் தங்கி தங்கியே ஓடியதில் அச் சிற்றூரைப் பிடித்துவிட்டான். எனினும் குதிரையைக் காணவில்லே. "ஐயா! குருவே! குருவே! எங்கேபோய் ஒளிந்துகொண்டீர்? உம்மைத் தொட்ட மாத்திரத்திலேயே நானும் கலேகள் சற்றுக் கொண்டுவிடுவேன் என்கிறபயத்தினுலா ஓடிவிட்டீர்! என் வயிற்றிலும் சிறிது ஆடுவதுபோல இருக்கிறதே!" என்று கூறிக்கொண்டே தன்வயிற்றைக் குனிந்து பார்த்தான். ஓடிவந்த களேப்பினுல் பெருகுச்சு வருவதால் வயிறும் உப்பி உப்பி வடிவதைக்கண்டு. "ஆகா! வயிறு நன்ருக ஆடுகின்றதே! இன்னும் அவருடைய கலேமுற்றும் கற்றுவிட்டால் நாம் பெருத்த கீர்த்திமானுகி விடுவோமே அந்த

குருவை எங்கென்று தேடுவேன்?'' என்று புலம்பிக் கொண்டே வழியோடு சென்றான். அந்தக் குதிரை தன் எஜமானரின் வீட்டுப் புறக்கடைத் தோட்டத்தில் நிற்பதைக் கண்டு வெகு சந்தோஷங் கொண்டு ''ஆகா! அதோ! குரு அதோ குரு! காக்காயா! அரி! அரி! அரி!'' என்று கூறிக் கொண்டே அந்தத் தோட்டத்தில் சென்று குதிரையை மீண்டும் தடவினான்.

இவன் குதிரையினருகில் இருப்பதைக் கண்ட வீட்டுக்காரி ''ஐயோ! பகல் கொள்ளை! நமது தோட்டத்துக் காய்கனிகள் களவு போவதுடன் சமீபத்தில் நமது பசுங்கன்று காணமற் போய் விட்டதல்லவா! அவற்றை யெல்லாம் இந்தத் திருடன் தான் களவாடிக் கொண்டு போயிருக்கவேண்டும். வெகுதுணிவுடன் இருள் சூழ்வதன் முன் நமது குதிரையையும் களவாட இவன் வந்து விட்டான்.' ''பலநாளையதிருடன் ஒரு நாளில் அகப்பட்டுக் கொள்வான் என்று பலமாகக் கூச்சலிட்டுக் கத்தினாள். உடனே இன்னும் சிலர் அவ்விடத்திற்கு ஓடி வந்து ''ஆகா! பிடி திருடனை! பிடி திருடனை'' என்று கூறியவாறு நமது தாஞ்சாபகதூரைப் பிடித்துக் கொண்டார்கள். திடீரென்று தன்னைத் திருடனென்று கூறிப் பிடித்துக் கொண்டதை எண்ணி ஒருவிதத் தகவலும் தெரியாமல் அவன் விழித்துக் கொண்டே நின்று விட்டான்.

தமிழ்நாடு ஆவணக் காப்பக நூலகம்
182852
சென்னை 600 008

Tamilian Residents of Calcutta.

Those who wish to save unnecessary postal expenses that may be incurred by remitting to us direct on :—

(1) Subscription for the New Year &

(2) Cost of other books published by us,

are hereby requested to pay the amounts to our Honorary Representative, Mr. R. Vasudevan, at the following addresses :—

(1) C/o "Capital" Ld.,
1, Commercial Buildings,
Clive Street,
CALCUTTA.

Or

(2) 33/B, Chandranath Chatterjee Street,
* *BHOWANIPORE.* CALCUTTA.

Manager,
"JAGANMOHINI" Office,
Triplicane, **MADRAS.**

சந்திர மேனகா

By

கமலவாஸன்

ஒரு இனிய தமிழ் நாவல். ஒவ்வொரு பக்கத்திலும் ஆச்சரியத்தையும் மயிர்க் கூச்சையும் உண்டாக்கக் கூடியது. படித்துக் கிழே வைக்கும் வரைக்கும் படிப்போர் மனதைக் கவரத்தக்கது. **மதுரவேணி** இறக்கும் தறுவாயில் **தாராவதி** க்குப் போதித்த நற்குணங்களும், **புஷ்பாவதி மேனகாவை** அவளுடைய தம்பியையே மணக்கும்படி செய்த சூழ்ச்சிகளும், **சந்திரன்** மேனகாவை அடைவதற்காகப் பட்ட கஷ்டங்களும், தன்னைக் காட்டிக்கொள்ளாமல் தாராவதி மேனகாவுக்குச் செய்த உதவிகளும் ஒவ்வொரு பக்கத்திலும் ஆச்சரியத்தைக் கொடுக்கக் கூடியவை விலை அணா 8.

விலாஸம்:—எஸ். கே. ஸ்வாமி, 1086 மேலசித்திரை வீதி, ஸ்ரீரங்கம்.

பின் கூறப்படும் இடங்களில் புஸ்தகம் கிடைக்கும்.

1. M. நடன சுந்தரம் Bros, புது மண்டபம், மதுரை.
2. டி. எம். வி. பிள்ளை, தெப்பக்குளம், திருச்சி.
3. ஹனுமான் வர்த்தக சாலை, ராயப்பேட்டை, ஹைரோட், மைலாப்பூர் சென்னை.
4. எ. வீ. ஸ்ரீனிவாஸ அய்யர், 30 முதல் தெரு, மன்னார்குடி.
5. N. இராமபத்திர அய்யங்கார், மேல மேட்டுத்தெரு கும்பகோணம்.

ஸ்ரீமான்-வடுவூர் கே. துரைசாமி ஐயங்கார் எழுதியவை

நூல்	ரூ.	அ.
பூர்ண சந்திரோதயம் 1,2,3,4	7	8
மாயாவினோதப் பரதேசி 1,2	5	0
மதனகல்யாணி 1,2,3	4	8
காளிங்கராயன் கோட்டை ரகசியம் 1,2	4	0
கும்பகோணம் வக்கீல் 1,2	3	0
மேனகா 1,2	3	0
விலாஸவதி 1,2	3	0
பாலாமணி	2	8
சௌந்தரகோகிலம் 1,2,3	6	0
கனகாம்புஜம் 1, 2,	2	12
வஸந்த மல்லிகா	1	8
வித்யாஸாகரம்	1	4
திவான் லொடபடசிங் பகதூர்	0	12
மாணிக்க வாசகர்	0	8
வஸந்தகோகிலம்	1	0
மரயசுந்தரி	0	12

வத்ஸா கம்பெனி,
திருவல்லிக்கேணி.

"கிருஷிகன்"

ஓர் மாதாந்த விவசாயப் பத்திரிகை.

பத்திரிகாசிரியர்கள்:....

(1) ராவ்பஹதூர் ஜெ. செல்வரங்க ராஜு
பென்ஷண்ட் விவசாய டெப்டி டைரெக்டர்

(2) J. R. ரங்கராஜு

வருஷ சந்தா தபால் கூலி உள்பட ரூபாய் ஒன்றுதான்.

எல்லோரும் சுலபமாய் அறிந்து கொள்ளக்கூடிய எளிய நடையில் கிருஷிகருக்கு அனுகூலமுண்டாகக் கூடிய வழிகளை எடுத்துக் காட்டுவதிலும், கிருஷிகருக்கு ஏற்படும் சந்தேகங்களை நிவர்த்திப்பதிலும் "கிருஷிகனு"க்குச் சமானமான பத்திரிகை கிடையவே கிடையாதென்பது நிச்சயம்.

"கிருஷிகன்" பத்திரிகையானது சுயநலத்தைக் கருதாது விவசாய அபிவிருத்தியையும், அதன் மூலமாய் தேச க்ஷேமத்தையும் கருதி வெளிப்படுவதால் வருஷ சந்தா தபால் கூலி உள்பட ரூ. ஒன்று வைக்கப்பட்டிருக்கிறது.

வி. பி. மூலமாய் அனுப்பினால் ரிஜிஸ்ட்ரேஷன் கூலி சேர்த்து ரூ 1-4-0 ஆகும். ஆகையால் உடனே ரூ. ஒன்று மணியார்டர் செய்து தங்கள் பேர்களைப் பதிவு செய்து பத்திரிகை பெற்றுக் கொள்ளுங்கள்.

மானேஜர் "கிருஷிகன்" ஆபீஸ்,
"ஜகந்நாதபாக்" சைதாப்பேட்டை, சென்னை.

உ

வியாஸங்கள்.

வியாஸங்கள் ! வியாஸங்கள் !!

வியாஸங்களை மிக எளிதில் அறிந்து அதன்படி நடந்து நன்மை யடையக் கூடிய விதமாக எழுதப்பட்டுள்ளன

கீழ்கண்ட வியாஸங்கள் ஒவ்வொரு தமிழரும் வாங்கி வாசித்துப் பயனடையக் கூடியனவாகும்.

நமது முன்னோர்களுடைய உபதேசங்கள் பலவற்றை நம்மில் பலர் அறியாமலிருக்கிறார்கள். காரணம், அவை யாவும் செய்யுளாக இருப்பதினால்தான். இந்த வியாஸங்கள் அச்செய்யுட்களையே பெரும்பாலும் தழுவி வசனமாக எழுதப்பட்டிருக்கின்றன.

		ரூ.	அ.			ரூ.	அ
அன்பு	....	0	1	போதுமதம்	....	0	2
பலவகை மனிதர்	....	0	1	ஆறுதாரம்	....	0	2
தவம்	....	0	1	சந்தேகம்	....	0	2
பொறுமை	....	0	1	கற்பு	....	0	3
இருவினை	....	0	2	அஸ்தபூஷணம்	...	0	4
இல்லறம்	....	0	2	பதினாறுபேறு	....	0	4
ஆலயவழிபாடு	....	0	2	என் தந்தையார்	....	0	6

மேல்கண்ட பதினான்கு புத்தகங்களையும் ஒரே தடவையில் வாங்குபவர்களுக்கு ரூபாய் இரண்டேக்கு கோடேக்கப்படும் தபால் சார்ஜ் இனாம். **இன்றே எழுதுங்கள்!**

நவீனகதா புத்தகசாலை,
122. மங்கமாரி வீதி, இரங்கூன்,

"அறிவு விளக்கம்."

இது அரியதோர் மாதாந்தப் பத்திரிகை. நீதி விஷயங்கள் நிரம்பப்பெற்றது. அறிவைப் பரவச் செய்யும் அருநிதியெனப் புகழ்மலிந்திலங்குவது. வருட சந்தா 6 அணா

அ. கிருஷ்ணசாமிபிள்ளை, ஆசிரியர் 'அறிவு விளக்கம்' உடுமலைப் பேட்டை.

ஆனந்த விகடன்

வந்தே மாதரம்

64 பக்கங் கொண்ட மாதப்பத்திரிகை.

சிறந்த எழுத்தாளரிடமிருந்து கட்டுரைகள் அதிகமாக வெளியிடப்படுகின்றன. தினமும் நூற்றுக்கணக்கானவர் சந்தாதாரராகச் சேருகின்றனர். மாதப் பத்திரிகைகள் எல்லாவற்றிலும் "ஆநந்தவிகடன்" சிறந்ததென்ற அபிப்பிராயம் ஜனங்கள் மனதில் நன்கு பதிந்திருக்கிறது. "ஆனந்த விகட" னிலுள்ள ஒரு பக்கத்திற்கு ஒரு ரூபாய் கொடுக்கலாமென்று ஒரு சந்தா நேயர் நமக்கு எழுதியுள்ளார். நீங்கள் ஒரு வருஷத்திற்கு ஒரு ரூபாய் கொடுக்சக் கூடாதா?

வருட சந்தா:—இந்தியா, பர்மா, ஸிலோனுக்கு

தபால் கூலியுள்பட ரூ 1....0....0

வெளி நாடுகளுக்கு முன் பணம் ரூ 1....4....0

மாதிரி காபி இனம்

ஆனந்த விகடன் ஆபீஸ்,

244, தங்கசாலை வீதி, மதராஸ்.

தந்தி விலாசம்:—"விகடன்" டெலிபோன் நெ. **3311.**

உயர்தரமான வாசனையுள்ள

மைசூர் ஊதுவத்திகள்

இவை எரியும்போதுண்டாகும் சுகந்த பரிமளம் மனத்தை ரமிக்கச் செய்யும்

அம்பர் வத்தி	சேர்	ரூ	8	சுந்தரி விலாஸ் வாஸனை பில்லை	அவுன்ஸ் ரூ. 5
ஆனந்தமால் வத்தி	,,	,,	20		
ஜவ்வாது வத்தி	,,	,,	6	பாரிஜாத அத்தர் தோலா	ரூ. 5
கஸ்தூரி வத்தி	,,	,,	4		
புனுகு வத்தி	,,	,,	3	தில் சாமன் தைலம் புட்டி	ரூ. 1
மட்டிப்பால் வத்தி	,,	,,	3		

குறிப்பு:—

மகாராணிகள், கோஷாக்கள் முதலியவர்களிடமிருந்து ஆர்டர்கள்சேகரிக்க ஒரு ஸ்திரீ ஏஜண்டு தேவை.

Sree Ramachandra Stores,

Big Bazar Street. Malleswaram P. O.

BANGALORE.

4-ம் பதிப்பு

இல்வாழ்க்கையின் இரகசியங்கள்

முன்னைக் காட்டிலும் அதிகமாக அநேக
ஆப்டோன் படங்கள் சேர்க்கப்பட்டிருக்கின்றன
விலை ரூபா 2 தான்.



இந்த ஏரோப்ளேன் டிரேட். மார்க் புஸ்தகத்தில் இருக்கிறதாவென்று பார்த்து வாங்குங்கள். ஏரோப்ளேன் ட்ரேட் மார்க் இல்லாத நூலை நீங்கள் வாங்கினால் நிச்சயம் ஏமாற்றமடைவீர்கள்

இந்நூலில் அடங்கியுள்ள விஷயங்கள்.

(1) இல்வாழ்க்கை என் சிறந்தது? (2) பெண்ணின் பெருமை பெண் கல்வி (3) நாணம் எப்படி உண்டாயிற்று? (4) உடைக்கும் நாணத்திற்கும் சம்பந்தம். (5) நாணமுள்ள ஸ்திரீயே அதிக இன்பந் தரக் கூடியவள். (6) நிர்வாணமாயிருப்பதின் தத்துவமென்ன? (7) இக்காலத்தில் எங்கெங்கே நிர்வாணமாயிருக்கின்றனர்? (8) காதல் என்றால் என்ன? காதலுக்கும் காமத்திற்குமுள்ள வித்தியாசம். (9) மனைவிகளைக் கணவன்மார் எப்படி வசியப்படுத்துவது? (10) கணவன்மாரை மனைவிகள் எப்படி வசியப்படுத்துவது? (11) ஸ்திரீகளுக்கு எப்பெப்பொழுது காமம் உண்டாகிறது? (12) அவர்களிடத்தில் அமிர்த நிலை எங்கெங்கே இருக்கிறது? அதை எப்படி நிலை பெயர்க்கிறது? (13) சங்கமம் செய்யவேண்டிய நாளும் நாழிகையும் (14) ருதுவாவதின் மர்மம் அல்லது மாதவிடாய் என்பதன் தத்துவமென்ன? (15) மனம் போல் மக்களைப் பெறும் அரிய உபாயங்கள் (16) கர்ப்பகாலத்தில் ஸ்திரீகள் நடந்துகொள்ள வேண்டிய முறைகள் இவை போன்ற இன்னும் அநேக அரிய விஷயங்களிருக்கின்றன.

இந்நூல் உங்கள் ஊரிலுள்ள புஸ்தகஷாப்பிலிருக்கிறதாவென்று பாருங்கள்; இல்லாவிட்டால் கீழ்கண்ட விலாசத்துக்கு எழுதவும். ஒரே சமயத்தில் இரண்டு காபிகள் வாங்கினால் தபால் செலவு இனாம்.

வாஸன் புத்தகசாலை,
244, தங்கசாலை வீதி, மதராஸ்.

தந்தி விலாசம் "விகடன்" டெலிபோன் 3311

கெட்டி சாயம்! உயர்ந்த உடை!! விலை நயம்!!!

உயர்தரமான பம்பாய் கெட்டிச் சாயமுள்ள

கலர் புடவைகள்

இவைகள் தினந்தோறும் தோய்த்து அணியத் தக்கவை. செம்புரோஸ், ஆரஞ்சு, பச்சை, சாக்லேட் நிறங்களில் கிடைக்கும். பெண்மணிகளைத் திருப்திப்படுத்த பளபளப்பும் வசீகரத்தோற்றமும் கொண்ட இவ்வாடைகளை வாங்குதலே சரி.
அளவு 18 x 2¾ முழங்கள்.

முதல் ரகம் விலை ரூ. 5-8-0 **2-வது ரகம்** ரூ. 4-8-0
பூக்கொடிக்கரை நெய்து முந்தாணியில் பூவேலை செய்திருக்கும் உருப்படி 1-க்கு ரூ. 1-8-0 அதிகம்.

ஜர்மன் சில்க் புடவைகள்

சாதா: மயில் கழுத்து, பொன் வண்டு, மேகவர்ணம், மாந்தளிர், பச்சை, அரக்கு, கருப்பு முதலிய எல்லாக் கலர்களிலும் கிடைக்கும். பெங்களூர் முந்தாணி போட்டது. கலர் கெடாதது. மனோகரமான மழமழப்பு. பளபளப்பு மாறாதது. ரம்மியமான தோற்றமுள்ளது. நேர்த்தியான நெசவு கொண்டது. நீடித்து நிற்பது. உறுதியானது.

18 x 2¾ முழங்கள் விலை ரூ. 11-8-0
ரவிக்கை துண்டு 1-க்கு 0-11-0

கோட்டடி: கரைகளில் பேட்டு வைத்து உடலில் பவழக் கொடி, தந்திக் கம்பி, டில்லி தர்பார் முதலிய தினுசுகள்

18 x 2¾ விலை ரூ. 12-8-0
ரவிக்கை 1 முழம் 0-12-0

மேற்படி பிளேன், கொட்டடி தினுசுகளில் ருத்திராக்ஷப் பேட்டு வைத்து தலப்பிலும் ஜரிகை (கருக்காதது) வேலை செய்ய உருப்படி 1-க்கு 3-0-0 அதிகம்.

குறிப்பு.—உத்தம உடைகளுக்கு உத்தரவாதம். ஆகவே நல்ல சரக்குகளை இங்கேயே வாங்குங்கள். ஆர்டருடன் கால் பங்கு முன் பணமனுப்புக. தபால் கூலி வேறு.

ஒரே சமயத்தில் 100 ரூபாய் சரக்கு வாங்குபவற்கு 1 ரூபாய்க்கு 0-1-6 வீதம் குறைக்கப்படும்.

ஸிட்டி நெசவுச் சாலை,
65, அரமனைக்கார வீதி,
ஜி. டி. சென்னை.

ஏஜண்டுகள் தேவை.

எங்கள் விசேஷ குறைந்தவிலை விற்பனை

22-காரட் ரோல்டு கோல்டு
புது மாடல் கைக் கெடியாரங்கள்



இதிற் கண்டபடி எந்த ஷேப் வேண்டுமானாலும் அனுப்பப்படும். வேலைப்பாடு மிகவும் உறுதி. கையில் கட்டிக் கொண்டால் தங்க ஆபரணம் போல் இருக்கும். ஒவ்வொரு கடியாரத்திற்கும் ரோல்டு கோல்டு அமெரிக்கன் கைச்சங்கிலி இனமாய்ச் சேர்த்து அனுப்பப்படும். 5-வருஷம் உத்தாவாதம். ரூபா 4-15-0 வி. பி. வேறு.

ரோல்டு கோல்டு "கோல்டன்" ஹாரங்கள்

இவைகள் பரிசுத்தமான ரோல்டுகோல்டில் தயாரித்து இடையிடையே இமிடேஷன் வைரங்கள் பொதியப்பெற்றது. இருதயபதக்கத்துடன் கூடியது

விலை ரூ. 2

ரோல்டு கோல்டு "சோல்டன்" மோதிரம்

இமிடேஷன் வைரங்கள் பொதியப் பெற்றது. பார்வைக்கு ரூ 100 மதிப்புடையது. விரல்களுக்கு நல்ல அணிகலம்; ஒரு முறை வாங்கியவர்கள் திரும்பவும் வாங்குகிறார்கள்.

விலை ரூ 1—8—0 உடனே எழுதுங்கள்

ஜினன் வாட்சு கம்பெனி, மிண்டு பில்டிங்ஸ், மதராஸ்.

தஞ்சை ஸ்ரீமான் *N*. விஸ்வநாத அய்யரவர்களால்
இயற்றப்பட்ட தமிழ் நாடகங்கள்

ராஜசேகரன்

அல்லது மூன்று தேசப்பிரஷ்டர்கள் என்னும்

துப்பறியும் தமிழ் நாடகம்.

இந்த நவீன நாடகம், தற்கால நாகரிகத்தை ஒட்டி எழுதப்பட்டிருக்கிறது. இதில் ராஜசேகரன், என்னும் வீரன் தன் இரு நண்பர்களுடன் ஜயவீரன் என்னும் ஓர் ராஜகுமாரன் உதவியால் சிறையிலிருந்து ஆச்சர்யமாகத் தப்பி ஓடி யாவராலும் புகழப்படும் "மாயவன்" என்னும் மாயக் கள்வனாக மாறி, சத்தியம், தருமம் இவைகளை நிலை நிறுத்தி ராஜ்யத்தில் நடந்த அந்தரங்கமான அரசனின் கொலையை அதி சாமர்த்தியமாகக் கண்டு பிடித்து, உண்மைக் குற்றவாளியைக் காண்பித்துக் கொடுப்பதுமின்றி தன்னை ஆதியில் சிறையினின்றும் காப்பாற்றிய ஜயவீரன் என்னும் ராஜகுமாரனைக் கொலைக் குற்றத்தினின்றும் காப்பாற்றி அதன் மூலமாகத் தன் உண்மை நட்பை வெளியிடுவது, யாவரையும் பிரமிக்கச் செய்யும்,

விலை அணா 8

வீரஸிம்ஹன் அல்லது மெய்க்காதலின் இரகசியம்

இந் நூலில், வஞ்சகனின் சூழ்ச்சி, வீரனின் காட்சி, நட்பின் மாட்சி, மெய்க்காதலின் சக்தி, இவைகள் நன்கு விளங்கும்.

விலை அணா 8

வத்ஸா கம்பெனி. திருவல்லிக்கேணி.

பிரபல ஜோதிஷர்

பண்டிட் காழியூர் ம. ஸ்ரீனிவாஸாச்சாரியார்

மஹாராஜாக்களாலும், புகழ்பெற்ற பல பெரியோர்களாலும் அனேக தங்கமெடல்களும் நற்சாட்சிப் பத்திரங்களும் பரிசு பெற்றவர். ஜாதகம் அல்லது பிறந்த ஹல் மீ தேதி டயம் முதலியவற்றை தெரிவித்தால் திரிகால பலன்களையும் மிகத்தெளிவாக அறிவிப்பார். ஒரு ஜாதகம் குறிக்க ரூ. 2. ஜாதகத்தின் திரிகால பலன்களையும் தெசபுக்தியுள்பட நேரில் சொல்வதற்கு ரூ. 5. மேற்படி பலன்களை ஆயுள்வரையில் எழுதுவதற்கு ரூ. 20. ஆரூடம் எதிர் காலத்தைப் பற்றிய கேள்வை 3-க்கு ரூ. 1. மேல் கேள்வை ஒவ்வொன்றிற்கு அணா 8. ஆரூடத்திற்கு லெடர் யெழுதும் டயம் தேவை. ஜாதகத்திர்க்கு பிறந்த டயம் தேவை. மற்ற விவரங்களுக்கு தற்கால விலாசத்திற்கு நேரிலாவது எழுதியாவது தெரிந்துகொள்ளலாம்.

218 "ஸ்ரீநிவாஸ்" தங்கசாலை வீதி, மதறாஸ்.

இனாம்! இனாம்!! இனாம்!!!

1929 வருஷத்திய அழகிய காலண்டர் இனாம்! $3\frac{1}{2}$ அணா இந்தியா ஸ்டாம்பு அனுப்புகிறவர்களுக்கு 4 அணா விலையுள்ள நாவலுடன் 3 கலரில் அச்சிட்ட 1929 ஹூத்திய காலண்டர் இனாம்!

ஸ்ரீ வாணி விலாச புஸ்தகசாலை

திருப்பாதிரிப்புலியூர்

Published by V. M. Parthasarathy Iyengar,
for "JAGANMOHINI OFFICE"
PRINTED AT THE TATA PRESS, MADRAS.

மேற்கூறியவர்கள் தமக்கு வேண்டிய புத்தகங்களைத் தெரிவித்தால் அனுப்புகிறோம்.

1929ளு ஜனவரி மீ 25 தேதிக்குள் சேரும் சந்தா நேயர்களுடைய நம்பர்களைக் குலுக்கிப்போட்டு பின்வரும் விவரப்படி பரிசுகள் கொடுக்கப்படும்.

1-வது பரிசு ரூ. 15.	3-வது பரிசு ரூ. 5.
2 வது பரிசு ரூ. 10.	4-வது பரிசு ரூ. 5.

இரண்டாவது சஞ்சிகை சந்தா செலுத்தியவர்களுக்கு மாத்திரந்தான் அனுப்பப்படும்.

"ஜகன்மோகினி"யில் வெளிவந்த நாவல்கள்.

மலர் I.	ஸ்ரீமான் வடுவூர் கே. துரைசாமி அய்யங்கார் எழுதிய காளிங்கராயன் கோட்டை ரகசியம் (2-பாகங்கள்)	ரூ.	4	0	0
மலர் II.	விலாஸவதி (2-பாகங்கள்)	ரூ.	3	0	0
	ஸ்ரீமான் அ. முத்துகிருஷ்ணன் எழுதியவை.				
	கனக சபை	ரூ.	1	8	0
	கோகிலம்	ரூ.	0	6	0
	ஸ்ரீமதி வை. மு. கோதைநாயகி அம்மாள் எழுதியவை.				
மலர் III.	வைதேகி (2-பாகங்கள்) ---	ரூ.	2	8	0
மலர் IV.	பத்மசுந்தரன் (2-பாகங்கள்) —	ரூ.	2	8	0
மலர் V.	ராதாமணி (2-பாகங்கள்) —	ரூ.	2	8	0
	சண்பக விஜயம் —	ரூ.	1	12	0
	சௌரீ புருந்தன் —	ரூ.	1	12	0

"ஜகன்மோகினி" சந்தாதார்களுக்கு குறைந்த விலை.

வைதேகி —	ரூ.	2	0	0
பத்மசுந்தரன் —	ரூ.	2	0	0
ராதாமணி —	ரூ.	2	0	0
சண்பக விஜயம் —	ரூ.	1	8	0
சௌரீ புருந்தன்	ரூ.	1	8	0

"ஜகன்மோகினி" ஆபீஸ்
26, தோடித் தெரு
திருவல்லிக்கேணி, சென்னை

இனம் தபால் செலவு இனம்

இரண்டு அணு ஸ்டாம்ப அனுப்புகிறவர்களுக்கு "போலீஸ் கிலிபொதிநாயர்" "ராவ் பகதூர் ஷெர்லக்ஹோம்ஸ்" என்னும் இரண்டு நாவல் அனுப்பப்படும்

எத்ஸா கம்பெனி திருவல்லிக்கேணி

Regd No. M 2210. JAGANMOHINI VOL. VI No. I.

அமிர்தாஞ்சனம்



எல்லா நோய்களுக்கும் திவ்ய ஔஷதம்

விலை அணா பத்து.

எல்லாக் கடைகளிலும் கிடைக்கும்.

அமிர்தாஞ்சன் டிபோ,

7, தம்புச்செட்டி வீதி, சென்னை.